விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து








சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 09 சனிக்கிழமை (22.03.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 094


## மதுரைப் பண்டிதர் சச்சிதானந்தம் நேற்று இறைவனடி சேர்ந்தார்

(யாழ்ப்பாணம்)

மதுரைப் பண்டிதர் கணபதிப்பிள்ளை சச்சிதானந்தம் தனது 87-வது வயதில் நேற்றுக் காலமானார். வடமராட்சி தும்பளையைப் பிறப்பிட மாகக் கொண்ட அவர், தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், வானியல், உளவியல் ஆகிய துறைகளில் பாண்டித்தியம் மிக்கவர்.

தும்பளை வே.கணபதிப்பிள்ளை சோதிடரின் மகனான இவர், 1935 ஆம் ஆண்டிலிருந்து இரகுநாதர் ஐயர் வாக்கிய பஞ்சாங்கக் கணிப்பில் முக்கிய உதவி செய்து வந்தார்.

விபுலானந்தரின் ஆய்வு உதவியாளராகவும் இவர் இருந்துள்ளார். 1960 இல் கணிதம் கற்பித்தல் தொடர்பில் லண்டன் டிப்ளோமாப் பட்டம் பெற்றார். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் உளவியல் விரிவுரையாளராகப் பண்டிதர் சச்சிதானந்தம் பணிபுரிந்துள்ளார்.

இலங்கைப் பாட விதானக் குழுவில் சில காலம் உறுப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் கூட்டங்களில் ஈடுபட மாணவர்களுக்குத் தடைவிதிப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களை அரசியல் கூட்டங்களில் கலந்து கொள்ளச் செய்வதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என மேல் மாகாண சபை முதலமைச்சர் றெயிநோல் கூறே தெரிவித்துள்ளார்.

பாடசாலை வேளைகளில் சீருடைகளில் மாணவர்களை வெளிச்செயற்பாட்டில் ஈடுபடுத்த வேண்டாம் என சுற்றுநிருபம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சர் சுசில் பிறேம ஜெயந்த தெரிவித்துள்ளார்.

சோசலிச மாணவ சங்கத்தின் மூன்றாவது மாநாட்டில் பாடசாலை மாணவர்கள் சீருடையுடன் கலந்து கொண்டமை தொடர்பாகக் கருத்து வெளியிட்டபோதே இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின்ஏற்பாட்டில் உள்ள மாணவ சங்கத்தால் பாடசாலை மாணவர்கள் சீருடையுடன் தமது அரசியல் நடவடிக்கையில் (10 ஆம் பக்கம் பார்க்க)

# சிறுபான்மையின மக்கள் ஏற்கக் கூடிய அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும்

## இந்திய பாதுகாப்பு அமைச்சு வலியுறுத்து

(புதுடில்லி)

**இலங்கையில் நிலவும் பதற்ற சூழ்நிலையைத் தணிப்பதற்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகாது. மாறாக ஐக்கிய இலங்கைக்குள் சகல இன மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஓர் அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும் என இந்தியப் பாதுகாப்பு அமைச்சு வலியுறுத்தியுள்ளது.**

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை தமிழ் அகதிகளுக்கான நிதியுதவி இரட்டிப்பாக அதிகரிப்பு

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கான நிதியுதவி இரண்டு மடங்காக அதிகரிக்கப்படுகின்றது. முகாம்களிலுள்ள அடிப்படை வசதிகளும் மேம்படுத்தப்படவுள்ளன எனத் தமிழக அரசு வரவு-செலவுத் திட்ட பரிந்துரையில் நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் தெரிவித்துள்ளார்.

மேலும் கூறுகையில், இலங்கைத் தமிழர் பிரச்சினையை மத்திய அரசுதான் கையாள வேண்டும். பிறந்த மண்ணில் வாழ வழியின்றி பல ஆண்டுகளாக இலங்கைத் தமிழர்கள் சந்தித்து வரும் பிரச்சினைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலம் அமைதியான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று அரசு விரும்புகின்றது.

இதனை நிறைவேற்றக் கூடிய பொறுப்பும் அதிகாரமும் மத்திய அரசிடம் தான் உள்ளது என தெரிவித்துள்ளார். (ச-5)

## சுனாமியில் காணாமல் போன சிறுவன் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

சுனாமி பேரலையின்போது காணாமல் போனதாகச் சந்தேகிக்கப்படும் 5 வயதுச் சிறுவன் ஒருவன் ஹெரவப்பொத்தானைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றின்படி மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ பஸ் மீது தாக்குதல் இருவர் பலி; ஆறுபேர் படுகாயம்

இராணுவத்தினர் பயணித்த பஸ் வண்டி அமுக்க வெடியில் சிக்கியதில் இராணுவத்தினர் இருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் ஆறுபேர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்கள் வவுனியா, மன்னார், அநுராதபுரம் ஆகிய வைத்திசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மன்னார் சவுத்பார் வீதியிலேயே நேற்றிரவு 7.20 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மன்னார் நகர்ப் பகுதியில் ரோந்துப் பணிகளை முடித்துக் கொண்டு தமது முகாம் நோக்கி இராணுவத்தினர் சென்ற பஸ்ஸை இலக்கு வைத்தே விடுதலைப்புலிகள் கண்ணிவெடித் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

இச் சம்பவத்தில் காயமடைந்த ஆறு பேரில் நால்வர் அநுராதபுரம் வைத்தியசாலையிலும் ஒருவர் மன்னார் இராணுவ வைத்தியசாலையிலும் மற்றையவர் வவுனியா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-5)

## தமிழ்ப் பெண்கள் நால்வர் கொழும்பில் கைது

குவைத்துக்குச் செல்வதற்காகக் கொழும்பு சென்ற 4 தமிழ்ப் பெண்கள் கொட்டகேனாப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இதன்போது கைது செய்யப்பட்டவர்கள் தோணிக்கல்லைச் சேர்ந்த குமாரைய்யா மல்லிகா (வயது-35), மணிரத்தினபுரத்தைச் சேர்ந்த துஷ்யந்தினி விஜயகுமார் (வயது-23), கணேஷன் இந்திராணி (வயது-32) மற்றும் சிவசுப்பிரமணியம் சித்திராதேவி (வயது-25) எனத் தெரியவருகின்றது.

இவர்கள் தற்போது பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)




இலங்கைக்கான இந்திய ஆயுத உதவிகளைக் கண்டித்து தென்னாபிரிக்காவின் இந்தியத் தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம்.

## வடபோர் முனையில் மோதல் 30 புலிகள் பலி- இராணுவம்

(கொழும்பு)

வடபோர் முனையில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் 30 பேர் கொல்லப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டை சுற்றியுள்ள முன்னரங்கப் பகுதிகளில் இடம்பெற்ற இம் மோதலில் படையினர் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் ஆறுபேர் காயமடைந்ததாகத் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக விடுதலைப்புலிகளிடமிருந்து தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை. ஆயிரக் கணக்கான விசேட அதிரடிப் படையினரைக் கிழக்கிலிருந்து வெளியேற்றி வட போர்முனையில் பணியாற்ற வைப்பது என்ற இந்தத் தருணத்தில் புதிய சண்டைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விசேட (10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2007 உயர் தர பரீட்சையில் '3A'சித்தி பெற்ற மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு - 15.03.2008




வட்டு.இந்துக் கல்லூரி மாணவன்



அளவெட்டி அருணோதயா கல்லூரி மாணவி




கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவி



வேலாயுதம் மகா வித்தியாலய மாணவன்




கரவெட்டி ஞானசாரியர் கல்லூரி மாணவி

(தொடர்ந்து வரும்)

## இலங்கைக்கான ஆயுத உதவியைக் கண்டித்து இந்தியத் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

### மனுவை ஏற்க தூதரகம் மறுப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான இந்தியாவின் ஆயுத உதவியைக் கண்டித்து தென்னாபிரிக்க வாழ் இந்தியத் தமிழர்கள் கடந்த வியாழக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தென்னாபிரிக்க மனித உரிமைகள் நாளான மார்ச் 21ஆம் திகதியை ஒட்டி தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரால் இந்தியத் தூதரகம் முன்பாக இக்கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் பெரும்பாலானோர் இந்தியத் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்கத் தமிழர் ஒருங்கிணைப் புக்குழுவைச் சேர்ந்த மதுரை, கண்டன மனுவை தென்னாபிரிக்க மனித உரிமை ஆணையகத்தின் தலைவர் ஜோடி கோலப்பனிடம் கையளித்தார்.

இந்திய அரசாங்கம் மனுவை ஏற்கமறுத்ததன் மூலம் தமிழ் மக்கள் தொடர்பான தனது ஏளனத்தன்மையை வெளிப்படுத்தியுள்ளது என்றார்.

கண்டன மனுவை பெற்றுக்கொண்ட கோலப்பன் பேசியதாவது,

அனைத்துலக மனித உரிமை பிரகடனத்தின் கோட்பாட்டின்படி உலகத்திலுள்ள அனைத்து மக்களும் சம உரிமை உடையவர்களாக கருதப்படவேண்டும்.

இந்தியாவுக்கு அடுத்தபடியாக பெருமளவிலான இந்தியத் தமிழர்கள் தென்னாபிரிக்காவிலேயே வாழ்கின்றனர்.

சுமார் 7 இலட்சம் தமிழர்களில் 50வீத தமிழர்கள் டேர்பன் நகர் மற்றும் அண்மைய பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட தினத்தை கண்டன நாளாக அனுஷ்டிக்க தீர்மானம்

(கொழும்பு)

கடந்த 25ஆண்டுகளாக தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்திவரும் சிங்களக் கடற்படையை கண்டிக்காத -தடுத்து நிறுத்தாத இந்திய அரசை எதிர்த்து, முதல் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட ஓகஸ்ட் 13இல் கண்டன நாள் அனுஷ்டிக்க தமிழ் நாட்டின் பெரியார் திராவிடர் கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் தியாகராசர் நகர் செ.தெ. நாயகம் மேல் நிலைப்பள்ளியில் நடைபெற்ற சிங்கள இராணுவத்தின் தொடர் படுகொலைக்கான கண்டனப் பொதுக்கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்கள் மீது முதன் முதலாக 1983ஆம் ஆண்டு இலங்கை கடற்படை தொடங்கிய துப்பாக்கிச்சூடு 25 ஆண்டுகளாக தொடர்ந்து இதுநாள்வரை 300க்கும் அதிகமான மீனவர்கள் படுகொலை செய்யப்பட்ட பிறகும் இதுவரை ஒருமுறை கூட இலங்கை அரசாங்கத்தை கண்டிக்க முன்வராத இந்திய அரசை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

சிங்களக் கடற்படையால் இதுவரை ஆயிரம் படகுகளுக்குமேல் சேதமடைந்து பல கோடி ரூபாய் பெறுமதியான மீன்பிடி வலைகளும் உபகரணங்களும் அழிந்துள்ள நிலையில் தமிழக மீனவர்களை இலங்கை அரசு கைது செய்வதும் பிறகு இந்திய தமிழக அரசின் தலையீட்டால் விடுதலை செய்வதும் தொடர் கதையாகி தமிழக மீனவர்களின் மீன்பிடித் தொழில் நிலை குலைந்துபோய் நிற்கிறது.

இந்த நிலையில் கச்சதீவுப் பகுதியில் தமிழக மீனவர்களுக்கான மீன்பிடி உரிமையை மீட்டுத்தரும் உடனடி நடவடிக்கைகளில் மத்திய அரசு இறங்கவேண்டும். இதற்கு தமிழக அரசு நடப்புக்கூட்டத்திலேயே சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி மத்தியஅரசை வற்புறுத்த வேண்டும் என்று இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்களுக்கு எதிராக இலங்கை கடற்படையின் துப்பாக்கிச்சூடு தொடங்கி எதிர்வரும் ஓகஸ்ட் 13ஆம் திகதியோடு 25 ஆண்டுகள் நிறைவடைகின்றது.

இதைக் கண்டித்து, தடுத்து நிறுத்தும் நடவடிக்கை எதையும் மேற்கொள்ளாத இந்திய அரசை கண்டித்து இலங்கைக் கடற்படை துப்பாக்கிகள் சுடத்தொடங்கிய அதே ஓகஸ்ட் 13ஆம் திகதி தமிழகம் முழுவதும் தமிழர்கள் வீடுகளில்,பொது இடங்களில் கறுப்புக் கொடிகளை ஏற்றி கண்டனக் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தி இந்திய அரசுக்கு எதிராக எதிர்ப்பை வெளிப்படுத்தும் கண்டன நாளாக கடைப்பிடிக்க வேண்டுமென்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ச-5)


### கூறுவிலை கோரல்

யாழ்.போதனா வைத்தியசாலையில் பின்வரும் இடங்களின் கூரைகள் திருத்துவதற்கான கூறுவிலை கோரப்படுகிறது. ICTAD இல் M9 பதிவுடையவர்கள் வரை விண்ணப்பிக்கலாம். கேள்விகள் 29.03.2008 காலை 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களை ரூபா 500/= செலுத்தி காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பணிப்பாளர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

(C-922)

NEW MICRO
COMPUTER SYSTEMS
center For computer Training

MEGA OFFER

பயிற்சி நெறிகள்
- Dip. in Computer Software Engineering
- Dip. in Computer Hardware Engineering
- Dip. in MicroSoft office
- Dip. in DTP
- Dip. in Video Editing
- Internet & E-mail
- Dip. in Computer Accounting

24.03.2008 தொடக்கம் 30.03.2008 வரை பரீட்சை நடைபெறும்

எமது நிறுவனத்தின் மூன்றாவது ஆண்டை முன்னிட்டு மாபெரும் புலமைப்பரிசில் திட்டம்

நீங்கள் விரும்பிய நேரங்களில் பரீட்சைக்குத் தோற்றலாம்
பொதுஅறிவு, பொது உளச்சார்பு பரீட்சைகள் நடைபெறும்.
பரீட்சை முடிந்து ஒரு மணித்தியாலத்துக்குள் உங்கள் பரீட்சை முடிவுகளை அறியலாம்.

60%-90% வரை புலமைப்பரிசில் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு

NEW MICRO COMPUTER SYSTEMS
Main Street, Chankanai. (near mediland pharmacy)

(C-923)

## இன்று ஒரு தகவல்

# மனவாட்டம்

ஓர் அம்மா. அவருக்கு 35 வயதிருக்கும். குடும்பத்தில் எந்தவிதமான கஷ்டமும் இல்லை. இருந்தாலும் காரணமில்லாமலே பிள்ளைகள் மீது எரிந்து விழுவது வழக்கம். பிள்ளைகள் அழும். உடனே அவர் மனது சங்கடப்படும்.

இன்னொரு அம்மா. நல்ல வேலையில் இருக்கிறவர். வாரத்துக்கு ஒருமுறையாவது தலைவலிவந்துவிடும். இவர்களுக்கு உடம்பிலே எந்தக்கோளாறும் இல்லை. மனம் மட்டும் சரியாக இருக்காது. தூக்க மத்திரையைக் கையிலே வைத்திருப்பார்கள்.

30-35 வயதுடைய பெண்களுக்கே சர்வசாதாரணமாக காணப்படும் மனக்கோளாறு இது. இதற்குப் பெயர் மனவாட்டம். (Depression) இதை மனமடிவு என்றும் சொல்லலாம். இந்த நோய்க்கு அறிகுறி என்ன தெரியுமா? மனதிலே வருத்தமான உணர்வு இருக்கும். அடிக்கடி அழலாம் போலத் தோன்றும். முன்னர் எந்தெந்தச் செயலிலே ஆர்வம் இருந்ததோ அதெல்லாம் குறைந்துவிடும். அல்லது சுத்தமாகவே ஆர்வமில்லாமல் போய்விடும். சில பெண்கள் இளம் வயதிலே பக்கத்திலே இருப்பவர்களிடம் கலகலப்பாகப் பேசுவார்கள்.

வீட்டை அலங்கரிப்பதில் ஆர்வம் இருக்கும். இப்பொழுது அதிலெல்லாம் ஆர்வம் இல்லாமல் போய் விடும். எந்த வேலை செய்தாலும் சீக்கிரம் களைப்பு ஏற்பட்டு விடும். நமக்கு யாருமே உதவியாக இல்லை; நம்மை எல் லாருமே கைவிட்டு விட்டார்கள் போல இருக்கிறது போன்ற உணர்வுகள் ஏற்படும். தன்னைத் தானே குறைசொல்லிக் கொள்வார்கள்.

குற்றம் செய்து விட்டதாக நினைத்து கஷ்டப்படுவார்கள். பசி இருக்காது. தூக்கத்திலே தொந்தரவு இருக்கும். அடிக்கடி செத்துப் போய்விடலாம் என்கிற உணர்வு உண்டாகும். சிலர் தற்கொலை முயற்சியிலே கூட ஈடுபடுவார்கள். சிலருக்கு பலவிதமான உடல் வலிகள் இருக்கும். பலவீனம் இருக்கும். சீக்கிரமாகக் களைப்படைந்து விடுவார்கள். இவையெல்லாம் மனவாட்ட நோய்க்கான தன்மைகள். இந்த மனவாட்டத்தை அதாவது Depressionனை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

ஒன்று தானாக உண்டாவது. மற்றது எதிர்விளைவை உண்டுபண்ணுகிற அல்லது நரம்பு சம்பந்தப்பட்ட Depression! தானாக உண்டாகும் மனவாட்ட நோய்க்கு ஏதாவது சூழ்நிலை காரணமாக இருக்கலாம். மூளையிலே Dopamine அல்லது Serotomin அளவு குறையும் போது இந்த டிப்பிரஷன் உண்டாகுகிறது. பாதிக்கப்பட்ட பெண்ணைப் பார்ப்பதற்கு பலவீனமாகத் தெரியும். கடுமையான குற்ற உணர்வு இருக்கும். தனியாக இருப்பதற்கு ஆசைப்படுவார்கள். கொடூரமான முறையிலே தற்கொலை செய்து கொள்ள முயற்சிப்பார்கள்... தீ வைத்துக் கொள்வது... நஞ்சு குடிப்பது... இப்படி! நடு ராத்திரியிலே தீடிரென எழுந்து உட்காந்து கொள்வார்கள்.

தானாக வரவழைத்துக்கொள்ளும் மனவாட்ட நோய் வந்து மறையக் கூடியது. ஒருமுறை வந்தால் மூன்றிலிருந்து ஆறுமாதம் வரை நீடிக்கும். இடைப்பட்ட காலத்திலே நோயாளி இயல்பாக இருப்பார். எதிர்விளைவை உண்டு பண்ணும் அல்லது நரம்பு சம்பந்தப்பட்ட மனவாட்ட நோய் கணவன்-மனைவி, மாமியார்-மருமகள் முதலிய உறவு முறைப் பிரச்சினைகள், தோல்விகள், எரிச்சல்கள், கந்தோர்ப் பிரச்சினை சூழ்நிலையாலே உண்டாகுகிறது.

எல்லாவற்றுக்கும் மருந்து இருக்கிறது. மார்க்கம் இருக்கிறது. கவலைப்பட வேண்டியதில்லை. தைரியமாக இருக்க வேண்டும். உளவியல் மருத்துவம் இதற்குமிகவும் உபயோகமாக இருக்கும். சில பெண்கள் எதற்குமே அலட்டிக் கொள்வதில்லை.

ஓர் அம்மா அப்படித்தான் தன் கணவனை அழைத்துக் கொண்டு ஒரு மனநோய் மருத்துவரிடம் வந்தார். "டாக்டர் என் வீட்டுக்காரர் திடீரென்று ஒரு மாதிரியாக ஆகிவிட்டார். வித்தியாசமாக நடந்து கொள்கிறார்... எப்படியென்றால் இவர் தன்னையே ஓர் ஒட்டடைக்குச்சியாக நினைத்துக் கொண்டு தன் தலையாலேயே வீட்டிலே உள்ள ஒட்டடையை எல்லாம் துடைத்துக்கொண்டிருக்கிறார்" என்றார். "எவ்வளவு நாளாக இப்படி இருக்கிறது?" என்று கேட்டார் டாக்டர்.

"ஒரு வாரமாக இருக்கிறது" என்றார் அம்மா. "அப்படியானால் முன்னாடியே ஏன் அழைத்துக்கொண்டு வரவில்லை?" என்றார் டாக்டர்.

"வீடு முழுவதும் சுத்தமாகட்டுமே! என்று காத்துக் கொண்டிருந்தேன் டாக்டர்" என்றார் அந்த அம்மா!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வெறும் அறிக்கைகளை மட்டும் விடாது உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்

## கனேடிய பணிப்பாளரிடம் மனோ எம்.பி.வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை விவகாரத்தில் வெறும் அறிக்கைகளை மட்டும் விடாது உறுதியான தீர்மானமொன்றினை



மேற்குலக நாடுகள் எடுக்க வேண்டும். இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நாள்தோறும் அதிகரித்து வருகின்றன. இத்தகைய நிலை தொடருவதற்கு மேற்குலக நாடுகள் அனுமதிக்கக் கூடாது என்று கனடாவின் தெற்காசிய பிரிவுக்கு பொறுப்பான பணிப்பாளர் ஜிம் நிக்கலிடம் மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட எம்.பி.யுமான மனோகணேசன் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள கனேடிய தூதரகத்தில் நேற்று முன்தினம் ஜிம் நிக்கலை மனோகணேசன் எம்.பி. சந் தித்து பேசினார். இச் சந்திப்பில் கட்சி யின் தேசிய அமைப்பாளரும் மேல் மாகாணசபை உறுப்பினருமான பிரபா கணேசனும் கலந்து கொண்டார். இலங்கையின் தற்போதைய நிலைவரம் குறித்து சந்திப்பில் எடுத்து விளக்கிய மனோகணேசன் எம்.பி.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நாள்தோறும் அதிகரித்து வருகிறது. கடத்தல், காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்கின்றன. இதனை தடுப்பதற்கு அரசாங்கம் நட்வடிக்கை எடுப்பதாக இல்லை. எனவே இத்தகைய செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்கு போதியளவு அழுத்தத்தினை கனடா அரசாங்கம் வழங்க வேண்டும். இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள். வன்முறைகள் தொடர்பில் கண்டன அறிக்கைகளை மட்டுமே மேற்குலக நாடுகள் விடுத்து வருகின்றன.

எனவே இனியாவது இலங்கை விவகாரம் தொடர்பில் ஆக்கபூர்வமான தீர்மானங்களை மேற்குலக நாடுகள் மேற்கொள்ளவேண்டும். இதுவே இன்றைய அவசியத் தேவையாகும்.

கனடாவிலேயே அதிகளவான இலங்கை தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். எனவே இலங்கை விவகாரத்திற்கு கனேடிய அரசாங்கம் தலைமை தாங்க வேண்டும். இதன் மூலம் இலங்கையின் நெருக்கடிக்கு தீர்வைக் காண்பதற்கான அழுத்தத்தினை மேற்குலகம் வழங்க முடியும். இதற்கான தேவை தற் போது எழுந்துள்ளது.

எனவே இனியும் தாமதிக்காது இலங்கை விவகாரத்தில் மேற்குலகம் தீர்க்கமான முடிவினை எடுக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

மனோ கணேசன் எம்.பி.யின் கருத்துக்களை நன்கு செவிமடுத்த தெற்காசிய விவகாரங்களுக்கான கனடாவின் பணிப்பாளர் ஜிம் நிக்கல் எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகளை கனடா மேற்கொள்ளும் என்று உறுதியளித்துள்ளார். (அ-5)

## யாழ்.கிளிநொச்சி முஸ்லிம்களுக்கென புதிய கட்சி; இன்று அங்குரார்ப்பணம்

(புத்தளம்)

யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம்களின் விமோசனம் கருதி புதியதோர் கட்சி ஆரம்பிக்கப்படவுள்ளது. இது தொடர்பான அங்குரார்ப் பணக் கூட்டம் இன்று சனிக்கிழமை புத்தளம் மர்ஹும் பிஷ்ருல் ஹாபி ஞாபகார்த்த நகர மண்டபத்தில் நடைபெறும். இதற்கான ஒழுங்குகளை ஏற்பாட்டுக்குழு வின் இணைச் செயலாளர்களான சல்மான் மற்றும் ஜெனூஸ் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர். இது குறித்து அவர்கள் தெரி விக்கையில்,

யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம்களின் வாக்குகள் தேர்தல் காலத்தில் மாத்திரமே பெறுமதிமிக்கவை. அதற்கு பிறகு அம்மக்களின் அவலங்களை கேட்பதற்கும், பார்ப்பதற்கும் ஒருவரும் முன் வருவதில்லை. அம் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதோடு அம் மக்கள் தமது தாயக பூமியில் மீளக் குடியேறி சுதந்திரமாக வாழ்வதற் கான ஏற்பாடுகளை செய் வதற் காகவே புதிய கட்சி உருவாக்கப்படவுள்ளது.

இம் முயற்சிக்கு எமது மக்கள் மத்தியில் பரவலான ஆதரவும் வரவேற்பும் உள்ளதை நாம் அவர்களுடன் பேசிய போது புரிந்து கொண்டோம் என்றனர். (அ-5)

## இராசிபலன்

22.03.2008

(பங்குனி 09, சனிக்கிழமை)

அத்தம் முழுவதும்

பிரதமை பின்னிரவு 01.13 மணிவரை

இராகுகாலம் 09.16-10.46 மணிவரை

சுபநேரம்-03.16-04.46மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தனவருவாய், உடல்நலம். |
| இடபம் | தாழ்ந்த சுபாவம், வியாபார நன்மை, சொத்துப் பிணக்கு. |
| மிதுனம் | ரோகநிலை, சுபசெலவு, கல்வியில் ஆர்வம், நல்ல முயற்சி. |
| கடகம் | அன்னியர் சந்திப்பு, சகோதரர் உதவி, பொருள் சேர்க்கை. |
| சிங்கம் | மனோசங்கடம், அதிக செலவு, வேலைச்சுமை, ரோகநிலை. |
| கன்னி | ஜனவசியம், நல்ல முயற்சி, போச்னசுகம், பெரியோர் உதவி. |
| துலாம் | மனச்சோர்வு, காரிய அலைச்சல், சுபசெலவு, சயனசுகக்குறைவு. |
| விருச்சிகம் | தொழில்சிந்தை, மனமகிழ்ச்சி, முயற்சி கைகூடும். |
| தனுசு | உற்சாகம் சுபநிகழ்வு, மேன்மையடைதல், நண்பர்கள் உதவி. |
| மகரம் | அச்சமான நிலை, பிரயாணம், தொழில் நன்மை, புதிய திட்டமிடல். |
| கும்பம் | நிலைமாற்றம், வீண்பகை, உடல் நலக்குறைவு, முயற்சிதாமதம். |
| மீனம் | நண்பர்கள் சந்திப்பு, காரிய நன்மை, பொருள்சேர்க்கை. |

வளவன்

# நான்கு தமிழ் பெண்கள் கொழும்பில் கைது

(கொழும்பு)

குவைத் நாட்டுக்கு செல்வதற்காக கொழும்பு வந்த மூன்று பெண்களையும் அவர்களை அழைத்து வந்த மற்றொருபெண்ணையும்கைது செய்த கொட்டாஞ்சேனை பொலிஸார் அனைவரையும் நீதி மன்றில் ஆஜர் செய்து வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைத்துள் ளனர்.

இது குறித்து மலையக மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான பெ.இராதாகிருஷ்ணனிடம் முறையிடப்பட்டுள்ளது.

வவுனியா தோணிக்கல்லைச் சேர்ந்த குமரய்யா மல்லிகா (வயது 35), மணிபுரத்தைச் சேர்ந்த துசந்தினி விஜயகுமார் (வயது 23), அநுராதபுரத்தைச் சேர்ந்த கணே சன் இந்திராணி (வயது 32), சிவசுப்பிரமணியம்ஸ்ரீதேவி (வயது 25) ஆகிய நால்வருமே பழைய சோனகத் தெருவிலுள்ள விடுதி ஒன்றில் வைத்து கடந்த 9ஆம் திகதி கைது செய்யப் பட்டனர்.

முகவர் தொழில் புரியும் குமரய்யா மல்லிகாவும் மேற்படி மூன்று பெண்களும் வந்திருப்பது தொடர்பாக கொட்டாஞ்சேனை பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததை அடுத்தே இவர்கள் அனைவரும் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குப் பிறகு நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டதாக கொட்டாஞ்சேனை பொலிஸார் பிரதி அமைச்சரிடம் தெரிவித்தனர்.

கடவுச்சீட்டு. அடையாள அட்டை. விடுதி பொலிஸ் பதிவு. வெளி நாட்டு முகவர் விபரம். அனைத்தையும் சமர்ப்பித்த போதும் இவர்களை இம்சித்து அநாகரிகமாக பொலி ஸார் நடந்து கொண்டதாகவும் உறவினர்கள் பிரதி அமைச்சரிடம் விசனமும் கவலையும் தெரிவித்தனர். (அ-5)

# பொருளாதாரத்தை கருத்திற் கொண்டே துறைகளைத் தேர்ந்தெடுக்கின்றனர்

## சுகாதார அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

மருத்துவமாணவர்கள் பொருளாதாரத்தை கருத்தில் கொண்டே தமது துறைகளை தேர்ந்தெடுப் பதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவிக்கிறார். தங்காலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் வைத்தியத்துறையில் கல்வியைத் தொடரும் மாணவர்கள் நாட்டின் தேவையைக் கருத்திற்கொள்ளாது தமது தேவையைக்கருதியே துறையைத் தெரிவுசெய்வதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் நரம்பியல் வைத்திய நிபுணர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றபோதிலும் எவரும் நரம்பியல் துறையைத் தெரிவுசெய்வதில்லை என்று அவர் குற்றஞ்சாட்டியிருக்கின்றார்.

பொருளாதாரவசதிகளை உயர்த்திக்கொள்வதற்கு கூடிய துறைக்கே மருத்துவத்துறை மாணவர்கள் செல்வதாகவும் சுகாதாரத் துறை அமைச்சர் குறிப்பிட்டார். இதே வேளை நாட்டில் சட்டவைத்தியர்கள் குறைவாகக் காணப்படுவதாகவும் சடலங்களை வெட்டவேண்டி ஏற்படுவதனால் அந்தத்துறைக்குச் செல்ல மாணவர்கள் பயப்படுவதாகவும் அவர் தெரிவிக்கிறார். (அ-5)

# ஒவ்வொருவரும் பொறுப்புணர்வுடன் செயற்படுவதன் மூலம் மாவட்டத்திற்கு சிறந்த சேவையை வழங்கமுடியும்

(யாழ்ப்பாணம்)

கப்பலில் பொருட்களை இறக்கி ஏற்றும் தொழிலாளர் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் ஊடகங்களில் வெளிவந்துள்ளன. இதனால் சம்பந்தப்பட்ட விடயங்கள் தெளிவுபடுத்தப்படுகின்றன.

துறைமுகத்தில் இருந்து பொருட்களை இறக்குவதற்கு தொழிலாளர் ஒழுங்கு தொடர்பாக வேறு ஏற்பாடு இருந்தபோதும் யாழ். மாவட்ட நிலைமையைக் கருத்தில்கொண்டு தொழில் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு வருமானத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நன்நோக்கில் தொழிலாளர் ஒழுங்குகளை மாவட்டச் செயலகம் மேற்கொண்டது. இருந்தபொழுதும் கப்பலில் பொருட்களை இறக்கி ஏற்றும் தொழிலாளர்கள் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் காணப்படுகின்றன.

1.தொழிலாளர்கள் உரியநேரத்தில் கடமைக்கு சமுகமளிப்பதில்லை.

2. ஒரு கப்பலுக்கு என ஒதுக்கப்பட்ட 60 தொழிலாளரும் முழுமையாக சமுகமளிப்பதில்லை.

3. ஒரு கப்பலுக்கு என ஒதுக்கப்பட்ட குழுவொன்று அக் கப்பலில் எடுத்துவரப்பட்ட பொருட்களை முழுமையாக இறக்கி ஏற்றாது. இடைநடுவில் கைவிடல்.

4. ஒரு குழுவில் வேலை செய்வதாக பதிந்துவிட்டு வேறு குழுவுடன் சேர்ந்து செல்லுதல்.

இதன்காரணமாக கப்பலிலிருந்து பொருட்களை இறக்குவதில் காணப்படும் தாமதம் காரணமாக நாளொன்றுக்கு ரூபா 6இலட்சம் மேலதிக கட்டணமாக அறவிடுகின்றது.இதன்காரணமாக கப்பலில் பொருட்களை எடுத்துவந்த வியாபார நிறுவனங்கள் அம் மேலதிக தாமதக் கட்டணத்தை செலுத்த வேண்டியுள்ளது.அவ்வாறு செலுத்தப்படும் கட்டணங்களை பொருட்களின் விலையில் சேர்க்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. அத்துடன் கப்பல் கம்பனிகள் இக் காலதாமதம் தொடர்பாக தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளன.

இவ்வாறான சூழ்நிலையிலும் பல தொழிலாளர்கள் பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலும் இப்பணியை மேற்கொண்டு வருகின்ற பொழுதிலும் ஒரு சில தொழிலாளர்களின் செயற்பாட்டினால் பொருட்களை இறக்கி ஏற்றுவதில் பாரிய தடங்கல்கள் உள்ளன. தற்போது கப்பலில் பொருட்களை இறக்கி ஏற்றுவதற்கு என குருநகர், தெல்லிப்பளை, பருத்தித்துறை, கரவெட்டி,காரைநகர் ஆகிய பிரதேசங்களில் தொழில் ரீதியாக பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சார்ந்த தொழிலாளர்களை உள்ளடக்கிய ஏழு தொழிலாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழுவிலும் 70க்கு குறையாத தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு குழுத் தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கான கொடுப்பனவுகள் அவர்கள் சார்ந்த சங்கங்களூடாக செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.ஒவ்வொரு தொழிலாளரும், கடமையில் ஈடுபடும் ஒவ்வொரு உத்தியோகத்தரும் மிகுந்த பொறுப்புணர்வுடன் செயல்படுவதன் மூலம்தான் மாவட்டத்திற்கு சிறந்தசேவையை வழங்கமுடியும் என யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ஓ)




## புதிய நிர்வாகிகள்

நீர்வேலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் முன்னாள் தலைவர் க.தம்பலிங்கம் தலைமையில் இம்மாதம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அதில் 2008 ஆம் வருடத்திற்கான புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

விபரம் வருமாறு,

தலைவர்-க.தம்பலிங்கம் ஜே.பி, உபதலைவர் -கே.வி.நடராசா(இளைப்பாறிய படவரைஞர்), செயலாளர்-சி.பகவத்சிங்கம் (அதிபர்), உபசெயலாளர்- ச.சுரேஸ்கரன்-(வர்த்தகர்), பொருளாளர்-செ.நடராசா ஆகியோரும் 8 உறுப்பினர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (ஓ)

## ஆங்கில பாடப் பயிற்சிநெறி

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிப்பதற்காக ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் நோக்கோடு நெக்கோட் (NECORD) நிறுவனத்தின் அனுசரணையுடன், பட்டதாரி ஆசிரியர்களுக்கான ஆங்கிலப் பாடப் பயிற்சி நெறி, 10 நாட்கள் நடைபெறவுள்ளது. இப் பயிற்சி நெறிக்கு இணைப்புப் பெற்ற ஆசிரியர்கள் உட்பட சகல பட்டதாரி ஆசிரியர்களும் பங்குபற்றலாம்.

மேற்குறித்த பயிற்சி பொதுவாக ஆங்கிலத் திறன்களை விருத்தி செய்யும் நோக்குடன் வடிவமைக்கப்பட்டது. பயிற்சியாளர்களுக்கு (Modules) அச்சடித்த குறிப்புகள் வழங்கப்படும். இப்பயிற்சி நெறி வட இந்து மகளிர் கல்லூரியிலும், நெல்லியடி ம.ம.வித்தியாலயத்திலும் நடைபெறும்.முதலாவது தொகுதி பயிற்சியாளர்களுக்கான பயிற்சிகள் 29 ஆம் திகதி காலை 8.30 மணிமுதல் நடைபெறவுள்ளது. இரண்டாவது தொகுதி முதலாம் தவணை விடுமுறை நாட்களில் நடைபெறும். பங்குபற்ற விரும்பும் பட்டதாரி ஆசிரியர்கள் ,பயிற்சி பெற விரும்பும்தொகுதி 1 அல்லது 2, பயிற்சி பெற விரும்பும் நிலையம் பருத்தித்துறை அல்லது நெல்லியடி எனக் குறிப்பிட்டு விண்ணப்பங்களை சி.புஸ்பலிங்கம், பிரதிக்கல்விப் பணிப்பாளர், கல்வி முகாமைத்துவப் பிரிவு, வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம், பருத்தித்துறை எனும் விலாசத்திற்கு விரைவில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றனர். (ஓ-19)

## ஆய்வுகூடத் திறப்புவிழா

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் புதிய விஞ்ஞான ஆய்வுகூடத் திறப்புவிழா எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9மணிக்கு அதிபர் கு.ஜெகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட கல்வித் திணைக்கள பிரதம பொறியியலாளர் கு.சிவபாலன், தெல்லிப்பளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.கைலாயநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ)



சந்நிதியான் ஆச்சிரமம் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கு நடாத்திய இலவச வைத்திய முகாமிலே டாக்டர் எஸ்.சிவயோககுரு நோயாளர்களுக்கு வைத்திய சிகிச்சைகளை வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:-பரு.நிருபர்)

## மஹோற்சவமும் மகேஸ்வரனின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

காரைநகர் மணற்காடு அருள்மிகு தேவி கும்பநாயகி முத்துமாரியம்மன் தேவஸ்தான இரண்டாம் நாள் மஹோற்சவமும் அமரர் தி.மகேஸ்வரனின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் காலை 8 மணிக்கு அம்பிகைக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. இதில் தங்கத்தால் செய்த வலம்புரிச் சங்கினால் அம்பிகைக்கு விசேட அபிஷேகம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் அமரர் தி.மகேஸ்வரனின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இடம்பெறும்.

ஆத்மசாந்தி பிரார்த்தனை அஞ்சலிக் கூட்டம் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும். இதில் திருவாவடுதுறை ஆதீன வித்துவான் இசைமணி கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தனின் திருமுறை ஓதல் நிகழ்வு இடம்பெறும். (ஓ

## இளங்கலைஞர் மன்ற இசைவிழா

நல்லூர் இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் நடைபெறும் இசைவிழாவின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் இளங்கலைஞர் மன்ற கனடா கிளை ஆதரவில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஈழநல்லூர் எம். சிவசுப்பிரமணியம் குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும். தொடர்ந்து கீதவாணி இசைக் கல்லூரி மாணவிகளின் குழு இசை, காரைநகர் கிழவன்காடு இசைமன்ற மாணவர் வழங்கும் மிருதங்க இசை, இளங் கலைஞர் மன்ற மாணவர் வழங்கும் வயலின் இசை, காரைநகர் கிழவன்காடு இசை மாணவர் வழங்கும் குழு இசையும், முற்பகல் 11 மணிக்கு திருமதி வாசஸ்பதி ரஜீந்திரனின் இசைக்கச்சேரியும் இடம்பெறும்.

மாலை நிகழ்ச்சிகள் பிற்பகல் 2மணிக்கு நல்லூர் சாரங்கன் இசைக் கல்லூரி மாணவிகளின் குழு இசையுடன் ஆரம்பமாகும். அத்துடன் செல்வி திவ்யமணி மகாலிங்கம் குழுவினரின் இசையரங்கு, திருமதி விதுஷா கோபிகிருஷ்ணா ஆகியோரின் வீணை இசையும், திருமதி விக்னேஸ்வரி நரேந்திரா குழுவினரின் இசையரங்கும்,பொன் ஸ்ரீ வாமதேவன் குழுவினரின் இசைக்கச்சேரியும் இடம்பெறும். மாலை 5.15 மணிக்கு நல்லை கலா மந்திர் வழங்கும் நாட்டியாஞ்சலியும் இடம்பெறும்.(ஓ)

## கௌரவிப்பு விழா

நல்லூர் முருகன் சனசமூக நிலையம் கந்தையா குமாரசுவாமியின் 50 வருட சமூக பணியினைப் பாராட்டி அவரின் அமுத விழா அன்று 'அபயகரம்' எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30 மணியளவில் யாழக உரிமையாளர் நா. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறஉள்ளது. இந்நிகழ்வில் ஆசியுரையினை கீதா விரிவுரையாளரும் , நிலைய போசகருமான கா. மயில்வாகனமும் பாராட்டுரைகளை மாவட்ட புனர்வாழ் , புனரமைப்புச் செயலக திட்டப்பணிப்பாளர் ம. பிரதீபன் யாழ். மாநகர சபைஆணையாளர் மு.செ. சரவணபவ , ஓய்வு பெற்ற ஆசிரியரும் நிலைய உறுப்பினருமான முத்தமிழரசி செல்வி புஷ்பா செல்வநாயகம் , நல்லூர்தெற்கு கிராமசேவையாளர் திருமதி இராகினி இராமலிங்கம் ஆகியோரும் வாழ்த்துரையை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பிரதி அதிபரும் நிலைய உறுப்பினருமான ஆறு திருமுருகனும்வழங்கவுள்ளனர். பிரபல ஆங்கில ஆசான் ரி. என். பஞ்சாட்சரம் 'அபயகரம்' எனும் விருதினை வழங்கிக் கௌரவிப்பார்.

அத்துடன் நல்லை கலா மந்திர் மாணவிகள் வழங்கும் நாட்டிய நிகழ்ச்சிகளான இராகாஞ்சலி , 'கங்குலும் பகல்பட வந்தான்' நாட்டிய நாடகமும் இடம்பெறவுள்ளது. (ஓ)

## பயிற்சிக் கருத்தரங்கு

சுன்னாகம், கதிரமலை சிவன் கோயிலடியில் இயங்கும் சமூக கலை இலக்கிய உள மேம்பாட்டு மையத்தினால் அதன் பிரதான மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு "ஆளுமை உருவாக்கம்" பற்றிய பயிற்சிக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இதில் ஆசிரியர் க.கேசவன் கருத்துரை வழங்கவுள்ளார் என சமூக கலை இலக்கிய உள நல மேம்பாட்டு மையத்தினர் அறிவித்துள்ளனர். (அ-7)

## நவீன கணனிப் பயிற்சிநெறி

யாழ்.வலய முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் நடாத்தப்படும் நவீன கணனிப் பயிற்சி நெறி ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. கற்க விரும்புவோர் தங்கள் விபரங்களை சுயமாகத் தயாரித்து இம் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் அதிபர் யா/ வண்ணை நாவலர் ம.வி. என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு நாவலர் ம.வித்தியாலய அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## உள்ளூர் உற்பத்திக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவினால் ஜிரிசற் (GTZ) அனுசரணையுடன் கோப்பாய் விதாதா பயிற்சி நிலையத்தில் இருபத்தைந்து மாதர்சங்க உறுப்பினர்களுக்கு உள்ளூர் உற்பத்திகளின் பெறுமதிகளை அதிகரித்தலுக்கான இரண்டு வாரப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

கோப்பாய் பிரதேச செயலர் ஏ.மோகன்ராஜ் ஆரம்பித்து வைக்கப்பட்ட இப் பயிற்சி நெறியில் மாங்காய் சட்னி, தக்காளி சோஸ், மிளகாய் சோஸ், பெப்பமின்ற், பூசணிக்காய் ரொபி, கச்சான் அல்வா, எள்ளுருண்டை, குளுக்கோரசா, கறுவா இனிப்பு, மார்மலோ, ஜஸ் இனிப்பு,மில்க்ரொபி போன்ற இனிப்பு வகை தயாரிப்புக்களும், நெல்லிரசம், வெங்காயம், பீற்றூட், கீரட் போன்ற பானவகைகளும் மரவள்ளி பொரியல், மரக்கறி வற்றல், வெங்காய வற்றல் போன்ற தயாரிப்புக்களும் மற்றும் பழப்பாணி. பூசணிக்காய் பாணி, பழப் பாகு, சீனிச் சம்பல், குரக்கன் பிஸ்கட், உலர் த்திய மரக்கறியிலிருந்து மாமையிற் தயாரித்தல் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டன. (அ-134)

## வருடாந்த பொதுக்கூட்டம்

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை 9மணிக்கு புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் தலைவர் என்.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பி.சிவலிங்கம் மற்றும் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர். (ஓ-35)

## சிவதொண்டன் காலாண்டிதழ்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தினரால் வெளியிடப்படும் 'சிவதொண்டன்' பங்குனி- ஆனி மாத இதழ், (18.03.2008) பங்குனிமாத ஆயிலிய நாளான யோகர் சுவாமிகளின் குருபூஜை தினத்தையொட்டி குருபூஜை மலராக வெளிவந்துள்ளது.

இதழில் ''ஓம் எனும் மந்திரம்'' எனும் தலைப்பிலான 'ஓம்' எனும் மந்திரத்தின் உண்மைகள் அடங்கிய கட்டுரையும், "யாத்திரையும் யாத்திரிகனும்" "எங்கள் குருநாதன் திருப்பதிகள்", "எங்கள் குருநாதன் திருப்பதிக அமைப்பொழுங்கும்,தன்னை அறியும் வித்தையும்", "என்னை வழிநடத்திய குருநாதர்", "யோகர் சுவாமிகளது அனுபவ சித்தாந்தமும், அனைவரையும் முத்தியிற் சேர்க்கும் சன்மார்க்கமும்" எனும் தலைப்புகளில் சுவாமிகளின் சிந்தனைகள், அவர் தம் பெருமைகள் அடங்கிய கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. அத்துடன் "சைவத் திருமுறைச் சக்தியும், சமூக மறு மலர்ச்சியும்" எனும் தலைப்பிலான திருமுறைகளின் சிறப்புக்களும் அவற்றை ஓத வேண்டியதன் அவசியம் பற்றியும் யோகர் சுவாமிகளின் கருத்துக்கள் அடங்கிய கட்டுரையும், தினசரி தியானத்திற்குரிய சிந்தனைத் துளிகள் ஆங்கிலத்திலும் மற்றும் குருவும் அவரது சிஷ்யர்களும் எனும் தலைப்பிலான ஆங்கிலக் கட்டுரையும் வெளிவந்துள்ளது. (ஓ)



வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரர் சுவாமி ஆலய இரதோற்சவம் நேற்று பிற்பகல் நடைபெற்றது. சுவாமி தேரிற்கு ஆரோகணிப்பதை முதலாவது படத்திலும் ஆலயத்தை சூழவுள்ள வயல்களில் மழைவெள்ளம் நிரம்பியுள்ளபோதிலும் அடியார்கள் பக்தி பூர்வமாக வடம்பிடித்து தேர் இழுப்பதையும் (2ஆம்,3ஆம், 4ஆம் படங்களிலும்) அடியார்கள் அங்கப்பிரதட்சணம்,பறவைக் காவடி எடுப்பதையும் அடுத்த இருபடங்களிலும் காணலாம்.

# இந்து சமுத்திரத்தின் ஆதிக்கத்திற்கு அடித்தளமிடும் சீனா

அண்மை நாட்களாக அரசாங்கம் வெளிப்படையாகவே தனது சீன சார்பு நிலையை அறிவித்து வருகின்றது உலக இயங்கியல் விதிகளின் கீழ் மேற்குலகம் என்று சொல்லப்படுகின்ற முதலாளித்துவ பொருளாதார சார்பு நிலை நாடுகள் எதிர் முதலாளித்துவ பொருளாதார்ரத்திற்கு எதிரான போக்குடைய நாடுகள் என்ற இருபெரும் பிரிவுகள் காணப்படுகின்றன.

முதலாளித்து சார்பு நிலை நாடுகள் அமெரிக்காவின் கீழ் அதன் கொள்கைகளுக்கு ஆமாம் சாமி போடும் வகையில் அணிவகுத்திருக்க எதிர் முகாம் சீனாவை தலைமையாக கொண்டதாக எழுச்சி பெற்று வருகின்றது.

ஆசியாக் கண்டத்தின் பலம் மிக்க நாடாக விளங்கும் சீனா, அனைத்து துறைகளிலும் அமெரிக்க சார்பு கூட்டணிக்கு சவால் விடுத்து வருகின்றது_சீனாவின் எதிர்ப்பினை மீறி அமெரிக்கா ஆசியாக் கண்டத்தில் தனது இருப்பை உறுதிப்படுத்த பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளமை அனைவரும் அறிந்ததே.

வியட்நாம், ஆப்கானிஸ்தான், ஈராக் என அமெரிக்கா தனது படைகளை ஆசியாவில் ஆங்காங்கே நிலைகொள்ள வைத்துள்ள போதிலும் தெற்காசியாவில் அதன் நிலை கொள்ளலுக்கான வாய்ப்புகள் இன்னும் முழுமை பெறவில்லை.

தெற்காசிய நாடுகளில் எல்லாம் ஏதோ ஒரு பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையில் அமெரிக்காவின் கவனம் இலங்கையின் மீதே அதிகம் திரும்பியுள்ளது. காரணம் யாரும் சொல்லாமலே உங்களுக்கு புரிந்திருக்கும். இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் இலங்கையில் இருந்து தெற்காசியாவை மிக இலகுவாக அமெரிக்கா புலனாயலாம்.

ஏற்கனவே புத்தளத்தில் அமைக்கப்பட்டுள்ள அமெரிக்காவின் குரல் வானொலி நிலையத்தின் பிரதான செயல்பாடுகள் குறித்து இந்தியா உட்பட ஆசிய நாடுகள் கவலை அடைந்துள்ள நிலையில் இலங்கையில் நேரடியாக இராணுவ தளங்களை அமைப்பதும் போர்க் கப்பல்களை இலங்கை துறை முகங்களில் நிறுத்துவதும் ஆசிய நாடுகளுக்கு தலையிடியை ஏற்படுத்தும். அண்மைக்கால முதலாளித்துவ அல்லது அமெ ரிக்கா சார்பு நிலையிலான இந்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அமெரிக்காவின் இலங்கையில் தளம் அமைக்கும் முயற்சிகளுக்கு தடை போடாது அல்லது குறைந்த பட்ச எதிர்ப்பாகவே இருக்கும் என்கின்றனர் அரசியல் நோக்கர்கள்.

### சீனாவின் கனவை சிதறடிக்கும் அமெரிக்காவின் நகர்வு

அப்படியானால் அமெரிக்காவின் இலங்கையை நோக்கிய நகர்வு ஆசிய நாடுகள் மீதான சீனாவின் ஆதிக்க கனவை சிதறடித்துவிடும் என்பதுதான் தற்போதைய பிரச்சினை. அமெரிக்கா என்றல்ல, அமெரிக்க சார்புடைய இந்திய் அல்லது ஜப்பான் போன்ற நாடுகளும் ஆசிய கண்டத்தில் ஆதிக்கம் பெறுவதை சீனா விரும்பவில்லை.

இப்போது இருக்கக்கூடிய அரசியல் தட்பவெப்ப சூழ்நிலைகளின்படி கொதி நிலை கூடிய நாடாக இலங்கையே ஆசியாவில் காணப்படுகின்றது. எனவேதான் இலங்கையை மையம் கொண்டு கிழக்கு மேற்கு புயல்கள் வீசத் தொடங்கியுள்ளன.

இந்த புயல்களில் எந்த புயல் வீரியம் மிக்கதோ அந்த புயலே இலங்கையை தாக்கும் அல்லது தாங்கும். அண்மைக்கால இலங்கை அரசாங்கத்தின் போக்குகள் சீனாவின் ஆதரவு மட்டுமே போதும் என்பதையே எடுத்துக் காட்டுகின்றன்.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோகன்ன அண்மையில் வெளிப்படையாகவே மேற்குலக நாடுகள் மீது முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் மிகக் கவனமாக ஆராயப்பட வேண்டியவை.

இலங்கைக்கு அதிக உதவிகளை வழங்கும் மேற்குலக நாடுகளை ஓரம் கட்டிவிட்டு படைத்துறை உதவிகள் முதல் பாதைகள் அமைப்பது வரை சீனா தனது ஆதரவுக் கரத்தால் குட்டித்தீவை கட்டிப்போட முயல்வது தெளிவாகத் தெரியும். மேற்கு நாடுகள் தாம் வழங்கும் உதவிகளுக்கு மேலாக தாங்கள் எப்படி அரசியல் நடத்த வேண்டும் என பாடம் நடத்துவதாகவும் இது வெறுக்கத்தக்க செயல் என்றும் பாலித கோகன்ன குற்றம் சாட்டியுள்ளார்.

அவருடைய குற்றச்சாட்டு வெளியாகி ஈரம் காயும் முன்னர் அமெரிக்கா உலக நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பான தனது வருடாந்த அறிக்கையை வெளியிட்டு அதிர்ச்சி வைத்தியம் அளித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்றுவரும் அனைத்து விதமான மனித உரிமை மீறல்களுக்கும் அரசாங்கமே பொறுப்பு என்று அமெரிக்கா அந்த அறிக்கையில் குறிப்பிட்டு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியுள்ளது.

இந்த அறிக்கைகள் இலங்கை அரசாங்கத்தை ஒன்றும் செய்யாது என்பது ஒரு புறமிருக்க அமெரிக்கா வெளியிட்ட அறிக்கை அனைத்துல அரங்கில் இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களுக்கு வலுவான சாட்சியாக மாறிவிட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் துணை ஆயுதக் குழுக்களுடன் மேற்கொள்ளும் சட்டவிரோத செயல்கள், ஆட்கடத்தல்கள், அரசியல் நோக்கம் கொண்ட படுகொலைகள் என அனைத்தையும் அமெரிக்கா ஆவணப்படுத்தியுள்ளது.

அரச ஆதரவு துணை ஆயுதக் குழுக்கள் முதல் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் குழுக்கள் அமைச்சர்கள் என அனைத்து தரப்பினரையும் அமெரிக்கா தனது அறிக்கையில் குற்றவாளிகளாக சித்திரித்துள்ளது.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அறிக்கையிடல்களின் அடிப்படையில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சு தயாரிப்பில் வெளிவந்துள்ள இந்த அறிக்கையின் இயக்குநர் அமெரிக்காவின் இரும்புப் பெண்மணி என தற்போது வர்ணிக்கப்படும் கொண்டலிசா ரைஸ் அம்மையார். இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட வேண்டிய மற்றுமொரு விடயம் இலங்கை அரசாங்கம் தனது ஆதர்சனமாக கருதும் சீனா குறித்து அமெரிக்கா வெளியிட்டுள்ள குற்றச்சாட்டுகள் தான் ஒலிம்பிக் போட்டிகளை நடத்த தயாராகி வரும் சீனாவில் இடம்பெற்று வரும் மிக மோசமான மனித உரிமை மீறல்களே அமெரிக்காவின் மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையில் பிரதான பகுதி.

சீனாவையும் இலங்கையையும் மட்டுமன்றி ஏனைய நாடுகளையும் கூட தனது அறிக்கையில் அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ள போதும் ஆய்வாளர்கள் இந்த இரு நாடுகள் மீதான அமெரிக்க கோபத்தின் பின்னணி குறித்தே அதிகம் அக்கறை காட்டி வருகின்றனர்.

### அமெரிக்க அறிக்கையின் உட்கிடை

இந்த அறிக்கை வெளியானதால் ஆடிப்போன இலங்கை அரசாங்கம் வெளிவிவகார அமைச்சர் மூலமாக இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதுவரை சந்தித்து இந்த அறிக்கை தொடர்பில் விளக்கம் கோரியது.

எனினும் தமது அறிக்கையில் எந்த தவறும் இல்லை என்று அமெரிக்க பாணியில் தெரிவித்த றோபேர்ட் ஓ பிளேக் தமது நிலைப்பாடு மாற வேண்டுமானால் இலங்கை அரசாங்கம் தனது நடவடிக்கைகளை மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

நிச்சயமாக றோபேர்ட் ஓ பிளேக் குறிப்பிட்ட மாற்றம் இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்களை நிறுத்த வேண்டும் என்பதாக நீங்கள் கருதினால் அது தவறு. அமெரிக்கத் தூதுவர் கூறிய நிலைப்பாட்டு மாற்றம் என்பது சீன சார்பு நிலையை கைவிடுதல் என்பதாகவே பொருள் கொள்ளப்பட வேண்டும். இலங்கையில் இந்திய தலையீடு குறித்தும் சர்ச்சைகள் எழுந்துள்ளன.

இலங்கை அரச படைகளுக்கு இந்தியா இராணுவ உதவிகளை வழங்குவதை வரவேற்கும் அரசின் பங்காளிகளான ஜே.வி.பியினர் இலங்கையில் அரசியல் ரீதியாக தலையீடுகளை இந்தியா மேற்கொள்வதை கடுமையாக எதிர்த்துள்ளது.

தமிழ் மக்கள் விரும்பும் எந்த ஒரு தீர்வையும் இந்தியா பெற்றுதராது என்பது வெளிப்படையாக ஜே.வி.பியிற்கு தெரிந்திருந்தும் கூட இந்திய தலையீட்டை அது எதிர்ப்பதற்கு காரணம் அது சீனாவுடன் கொண்டுள்ள நெருக்கமான பிணைப்புத்தான்.

சீனாவின் குரலாகவே ஜே.வி.பி. இப்போது இலங்கை அரசியலில் ஒலித்து வருகின்றது. இதனால் கட்சிக்குள் முரண்பாடுகள் தோன்றியுள்ளமை வேறு விடயம் இலங்கைக்கு அதிகளவான உதவிகளை வழங்கி வந்த ஜப்பானை ஓரம் கட்டி விட்டு சீனா முதலிடத்தை பிடித்துள்ளது. இலங்கையில் பெருந்தெருக்கள் அபிவிருத்தி,மின்சார உற்பத்தித் திட்டங்கள் மற்றும் மகிந்த ராஜபக்ஷவின் சொந்த மாவட்டமான ஹம்பாந்தோட்டையில் மேற்கொள்ளப்பட்ட வரும் துறைமுக அபிவிருத்தி என சீனாவின் உதவிக்கரங்கள் இலங்கையின் அனைத்துதுறைகளையும் அரவணைத்து நிற்கின்றது.

அபிவிருத்திக்கான உதவிகளை சீனா பொறுப்பேற்றுக் கொண்டுள்ளதால் ஆயுத தளபாட அழிவுகள் குறித்தோ யுத்தத்தின் செலவுகள் குறித்தோ இலங்கை அரசாங்கம் கவலைப்படாது. அது மிக்-29 ரக தாக்குதல் வானூர்திகளையும் இன்னும் இன்னும் பெரிய ஆயுதங்களையும் வாங்கிக் குவிக்கும்.

வெற்றி பெற முடியாதென தெரிந்தும் பல முனைகளில் தாக்குதல்களை ஆரம்பிக்கும் தென்னிலங்கையில் போரில் தாங்கள் வெற்றி பெறுவதாகவும் விடுதலைப்புலிகள் தோற்று வருவதாகவும் கதைகள் கூறி சிங்கள மக்களை நம்பவைக்கும். அடுத்த தேர்தல் வரும் வரைக்கும் அல்லது சிங்கள மக்கள் தாங்கள் ஏமாற்றப்படுகின்றோம் என்பதைப் புரியும் வரைக்கும் இலங்கையில் போர்க்குரல் ஒலிக்கும்.

இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகளில் சீனா போடும் பாதைகள் அதன் நீண்டகால கனவுகளை நோக்காக கொண்டவை. இலங்கையில் அமைக்கப்படும் துறைமுகம் சீனாவின் நீண்டகால கனவின் ஒரு முக்கிய அம்சம்.

ஹம்பாந்தோட்டையில் சீனா அமைத்து வரும் துறைமுகம் சீனாவிற்கு இந்து சமுத்திரத்தில் ஆதிக்கத்தைக் கைப்பற்ற மஹிந்த ராஜபக்ச அமைத்துக் கொடுத்துள்ள மார்க்கம். இந்து சமுத்திரத்தில் பரந்து கிடக்கும் வளங்களை முற்றாக ஆக்கிரமித்து தனது அபரிமிதமான மனித வளத்தைப் பயன்படுத்தி முடிவுப் பொருட்களை உற்பத்தி செய்வதும் அதன் மூலம் உலக வர்த்தகத்தில் அசைக்க முடியாத சக்தியாக மாற்றம் பெறுவதும் தான் சீனாவின் ஒரே நோக்கம் என்கின்றார்.

சிங்கப்பூர் நான்ஜங் பல்கலைக்கழக அனைத்துலக விவகாரங்கள் தொடர்பான பேராசிரியர் ராஜா மோகன் சீனாவின் இந்தத் திட்டத்தை தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளார். அமெரிக்கா இலங்கைக்கான இராணுவ உதவிகளை நிறுத்தினாலும் மறைமுகமாக தனது நடவடிக்கைகள் மூலம் இலங்கை படைகளுக்கு உதவுவதை நிறுத்தவில்லை.

குறிப்பாக இந்து சமுத்திரத்தில் விடுதலைப் புலிகளின் ஆயுதக கப்பல்களை கண்காணிப்பதிலும் அவை தொடர்பில் தகவல்களை இலங்கை கடற்படைக்கு வழங்குவதையும் அமெரிக்கா தொடர்கின்றது. என்றேனும் ஒருநாள் தனது உதவிக்கான பலனை அமெரிக்கா இலங்கையிடம் இருந்து எதிர்பார்க்கும். அது அநேகமாக திருகோணமலை துறைமுகத்தில் நிரந்தரமாக தனது கண்காணிப்பு கப்பல் ஒன்று நிறுத்துவதற்கான அனுமதியாகத்தான் இருக்கும்.

சீனாவா... அமெரிக்காவா... ஆப்பிழுத்த குரங்காக மஹிந்த ராஜபக்சவின் நிலை மாறும் நாள் விரைவில்....

-இணையத்தளம்

# இலங்கை-மேற்கிந்திய தீவுகள் மோதும் முதலாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

(ஹயானா)

இலங்கை-மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி இன்று ஹயானாவில் ஆரம்பமாகிறது.

மேற்கிந்தியத் தீவுகளிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டி கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

இத்தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி இன்று ஹயானாவில் ஆரம்பமாகிறது. அண்மைக்காலமாக மேற்கிந்தியத் தீவுகள் தோல்விகளைச்சந்தித்துவரும்போதும் சொந்த மண்ணில் இலங்கை அணியை எதிர்கொள்வதால் பலம் அதிகமாக இருக்கும்.

அத்துடன் மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது சொந்த மண்ணில் இலங்கை அணியுடன் நடைபெற்ற அனைத்து டெஸ்ட் தொடர்களிலும் வெற்றி பெற்றுள்ளமையும் ஒரு பலமாக அமைகின்றது.

எனினும் இறுதியாக இலங்கையில் நடைபெற்ற இரு அணிகளுக்கிடையிலான பத்து டெஸ்ட் போட்டிகளில் மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண்டு போட்டிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.

இதேவேளை இலங்கை அணியைப் பொறுத்தவரை 2000ஆம் ஆண்டிற்குப் பின்பு நடைபெற்ற டெஸ்டில் 14 போட்டிகளில் தோல்வியடைந்துள்ளதுடன் சொந்த மண்ணில் பத்துப்போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது.

அத்துடன் தற்போது ஐந்து புதுமுக வீரர்களுடன் இலங்கை அணி களமிறங்குகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனினும் சொந்த நாட்டில் எங்கள் ஆதிக்கம் இருந்தது. வெளிநாடுகளில் வெற்றி பெறுவதில்லை என்றொரு நிலை இருந்தது.

இப்போது தமது அணி வெளிநாடுகளிலும் சிறப்பாக செயற்படும் என நேற்று இலங்கை அணித்தலைவர் மகேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் கிறிஸ் ஹைறல் கூறுகையில்,

இலங்கை அணி வீரர்கள் நன்றாக விளையாடுகிறார்கள். நிறுத்துவது எங்களைப் பொறுத்தது என்றார். (5)




# தொடரை வென்றது வங்கதேசம்

(மிர்பூர்)

வங்களாதேஷ் அயர்லாந்து அணிகள் மோதிய இரண்டாவது ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் 84 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 2-0 என்ற முன்னிலையில் தொடரைக் கைப்பற்றியது.



பங்களாதேஷ் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அயர்லாந்து அணி, மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

முதல் ஒருநாள் போட்டியில் தோல்வி அடைந்த அயர்லாந்து அணி, நேற்று முன்தினம் 2ஆவது போட்டியில் வெற்றிபெற்று சமன் செய்ய வேண்டிய கட்டாயத்தில் களமிறங் கியது. நாணயச்சுழற்சியில் வென்று துடுப்பாட்டம் செய்த பங்களாதேஷ் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெற் இழப்பிற்கு 246 ஓட்டங்கள் எடுத்தது.

இதில் நபீஸ் 60 ஓட்டங்களும், அகமத் 61 ஓட்டங்களும் எடுத்தனர். பந்துவீச்சில் லாங் போர்டு - ஸ்மித் 3 விக்கெற்றுக் களை கைப்பற்றினார். 247 ஓட்டங் கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத் தாடிய அயர்லாந்து 38.3 ஓவர்களில் அனைத்து விக்கெற்றுக்களையும் இழந்து 162 ஓட்டங்கள் மட்டுமே எடுத் தது. இதில் போத்தா 34 ஓட்டங்களும், போர்டர்பீல் 25 ஓட்டங்களும் எடுத்தனர்.

பங்களாதேஷ் சார்பில் ரெஷா 5 விக்கெற்றுக்களும், ரசாக் 3 விக்கெற்றுக்களும், ஹசன் 2 விக்கெற்றுக்களும் எடுத்தனர். இதனால் 2ஆவது போட்டியில் 84 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்கதேசம் வெற்றி பெற்றது. சிறப்பாக பந்துவீசி 5 விக்கெற்றுகள் எடுத்த வங்கதேசத்தின் ரெஷா ஆட்டநாயகனாக அறிவிக்கப்பட்டார்.

மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் வங்கதேசம் முதல் இரண்டு போட்டிகளில்வெற்றிபெற்று 2-0 என்ற முன் னிலையில் தொடரைக் கைப்பற்றியது.

இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவது போட்டி மிர்பூரில் இன்று நடைபெறுகின்றது. (5)

# ஆசிய கோப்பை கிரிக்கெற்றில் பாக்., இந்தியா ஒரே பிரிவில்

(லாகூர்)

ஆசிய கோப்பை தொடரில் பரம எதிரிகளான இந்தியா, பாகிஸ்தான் அணிகள்ஒரே பிரிவில் இடம் பெற்றுள்ளன. கடந்த 1984இல் முதலாவது ஆசிய கோப்பை கிரிக்கெற் தொடர் இந்தியாவில் நடந்தது. .

இத் தொடரில் ஆதிக்கம் செலுத்தி வரும் இந்திய அணி நான்கு முறை கோப்பை கைப்பற்றியுள்ளது. 2004 இல்இலங்கை கோப்பை வென்றது. இதற்கு பிறகு 2006இல் போட்டி நடைபெறவில்லை. தற்போது பாகிஸ்தானில் 9 ஆவது ஆசிய கோப்பை தொடர் எதிர்வரும் ஜுன் 24 முதல் ஜுலை 6 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

**இரண்டுபிரிவு**

இதில் இலங்கை உள்ளிட்ட 6 அணிகள் இரு பிரிவாக பங்கேற்கின்றன. ஏ பிரிவில் இலங்கை பங்களதேஷ் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகள் இடம்பெற்று உள்ளன. பி. பிரிவில் இந்தியா பாகிஸ்தான் கத்துக் குட்டி ஹொங்கொங்அணிகள் இடம் பெற்று உள்ளன. இதனால் லீக் சுற்றில் இருந்தே இந்தியா பாகிஸ்தான் மோதலை ரசிகர்கள் காணலாம். ஒவ்வொரு பிரிவிலும் இடம் பெற்றுள்ள அணிகள் தலா ஒரு முறை மோதும் முதலிரண்டு இடங்கள் பிடிக்கும் நான்கு அணிகள்அடுத்த சுற்றுக்கு முன்னேறும். இதில் முதலிடம் பெறும் இரு அணிகள் இறுதிப் பேட்டிக்கு தகுதி பெறும் கராச்சியில் 10 மற்றும் லாகூரில் 3 போட்டிகள் ஒளி வெள்ளத்தில் நடக்க உள்ளன.

சமீபத்தில் அவுஸ்திரேலிய அணி பாதுகாப்பு காரணங்களுக்காக பாகிஸ்தான் செல்ல மறுத்தது. ஆனாலும்ஆசிய கோப்பை தொடரில் அனைத்து அணிகளும்பங்கேற்க இருப்பதாக ஆசிய கிரிக்கெற் தலைவர் அஷ்ரபுல் ஹக் தெரிவித்தார். இவர் கூறுகையில் அவுஸ்திரேலிய அணிக்கு ஆசிய கலாசாரம் தெரியவில்லை. இங்கு விளையாட்டு போட்டிகளுக்கு ஒரு போதும் பாதிப்பு ஏற்பட்டதில்லை. ஆசிய கோப்பை தொடரில் பங்கேற்கும் வீரர்களுக்கு உரிய பாதுகாப்பு தரப்படும் என்றார். (5)

# அணுகுமுறையில் பாரிய மாற்றமில்லை என்கிறார் நடுவர் டேரல் ஹெயர்

(சிட்னி)

டேரல் ஹேயர் திருந்தவே இல்லை. நடுவராக தனது அணுகுமுறையில் பெரிய அளவில் மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது என அதிரடியாக தெரிவித்துள்ளார்.



கிரிக்கெற் உலகில் சர்ச்சைகளுக்கு பெயர் பெற்றவர் அவுஸ்திரேலிய நடுவர் டேரல் ஹேயர். கடந்த 2006 ஓவலில் நடந்த நான்காவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் வீரர்கள் பந்தை சேதப்படுத்தியதாக குற்றம் சாட்டினார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்போதைய அணித்தலைவர் இன்சமாம் மீண்டும் களமிறங்க மறுத்தார். இதையடுத்து இங்கிலாந்து வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இப் பிரச்சினை பற்றி சர்வதேச கிரிக்கெற் சபை (ஐ.சி.சி.) விசாரணை நடத்தியது. இதில் பாகிஸ்தான் வீரர்கள் பந்தை சேதப்படுத்தவில்லை என்பது நிரூபணமானது. தவறாக தீர்ப்பு அளித்த ஹேயருக்கு போட்டிகளில் பங்கேற்க ஐ.சி.சி. தற்காலிக தடைவிதித்தது.

**சட்ட சிக்கல் காரணம்:-** இந்தச் சூழலில் ஹேயர் மீதான தடையை சர்வதேச கிரிக்கெற் சபை (ஐ.சி.சி.) நீக்கியது. இதற்கு பாகிஸ்தான் கடும் எதிர்ப்பு தெரிவித்தது. தடை நீக்கப்பட்டதற்கு சட்ட சிக்கல் தான் காரணம் என ஐ.சி.சி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தலைமை நிர்வாகி மல்கம் ஸ்பீட் கூறியது,

தடையை நீக்கக் கோரி ஹேயர் தொடர்ந்த இனவெறி வழக்கு விசாரணைக்காக ஏற்கனவே பல கோடிகள் செலவானது. சமரச உடன்பாடு ஏற்பட்ட போதும் மீண்டும் நடுவராக நியமிக்கப்பட வேண்டுமென ஹேயர் தரப்பு வக்கீல்கள் வலியுறுத்தினர்.

இவரது ஒப்பந்த காலம் வரும் 2009 மார்ச்சில் தான் முடிவடைகிறது. வழக்கு தொடர்ந்து நடந்தால் சில ஐ.சி.சி. உயர் அதிகாரிகள் சாட்சி சொல் லும் நிலைமை ஏற்படும். இழப்பீட்டு தொகை யையும் கொடுக்க வேண்டியிருக்கும் சட்டசிக் கல், நிதி இழப்பு ஆகிய இரண்டையும் கணக் கில் கொண்டு ஒப்பந்த காலம் முடியும்வரை நடுவர் பணியில் ஹேயரை நீடிக்கச் செய்வது என்று முடிவு செய்தோம். இதன் மூலம் பிரச்சினைக்கு ஒரு வழியாக முற்றுப்புள்ளி வைத் தோம்.

இவ்வாறு மல்கம் ஸ்பீட் கூறினார். தங்களது நாடுகள் பங்கேற்கும் போட்டிகளில் டேரல் ஹேயர் நடுவராக நியமிக்கப்படக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில் தான் ஐ.சி.சி. சமரசத்திட்டத்தை பாகிஸ்தான், இலங்கை ஏற்றுக்கொண்டதாக கூறப்படுகிறது.

**மனதளவில் பாதிப்பு**

இதற்கிடையே மீண்டும் சர்வதேச நடுவராக பணியாற்ற உள்ள ரேடல் ஹேயர் தனது நடவடிக்கையில் பெரிய அளவில் மாற்றம் இருக்காது என்றார். இது குறித்து அவர் அளித்த பேட்டியில், தடை காலத்தில் மனதளவில் பாதிக்கப்பட்டேன். வரும் போட்டிகளில் நடுவராக எனது அணுகுமுறையில் மிகப் பெரிய அளவில் மாற்றம் இருக்காது . புதிய இன்னிங்சை ஆரம்பிக்கவுள்ளேன். இம்முறை வீரர்களுடன் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதில் முன்னேற்றத்தை எதிர் பார்க்கலாம்.

பொதுவாக வீரர்கள் விளையாடும் போது நான் தலையிடுவதில்லை. அவர்களுக்குள் பிரச்சினை பெரிதானால் மட்டுமே ஆய்வு செய்வேன். இது போன்ற விடயத்தில் இனி அதிக கவனத்துடன் இருப்பேன். என்னை பற்றிய விமர்சனங்களுக்கு பதில் சொல்ல விரும்பவில்லை. நடுவராக மிகச் சிறப்பாக பணியாற்ற காத்திருக்கிறேன். இவ்வாறு டேரல் ஹேயர் கூறினார். (5)

# சொன்டகி சேர்ப்பு

(டர்பான்)

இந்திய சுற்றுப்பயணத்துக்கான தென்னாபிரிக்க அணியில் இருந்து விலகிய லாங் வெல்ட்டிற்கு பதிலாக மொன்டோ சொன்டகி சேர்க்கப்பட்டுள்ளார். தென்னாபிரிக்க கிரிக்கெற் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் போட்டி தொடரில் விளையாடுகிறது.

இரு அணிகள் இடையேயான முதல் டெஸ்ட் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இந்த போட்டிக்கான சிமித் தலைமையிலான தென்னாபிரிக்க அணி இன்று காலை 9 மணிக்கு சென்னை வருகிறது. இந்திய அணி வீரர்கள் நேற்று இரவு முதல் இன்று காலை வரை தனித்தனியாக தங்கள் ஊரில் இருந்து வந்து சேருகிறார்கள். சனிக்கிழமை முதல் இரு அணி வீரர்களும் பயிற்சியில் ஈடுபடுகிறார் கள்.

**மொன்டே சேர்ப்பு**

இதற்கிடையில் ஆந்த்ரே நெல்லுக்கு பதிலாக தென்னாபிரிக்க அணியில் சேர்க்கப்பட்ட லாங்வெல்ட் விலகியதை தொடர்ந்து அவருக்கு பதிலாக வேகப்பந்து வீச்சாளர் மொன்டே சோன்டெகி அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

25வயதான மொன்டே இந்த சீசனில் முதல்தர போட்டியில் 62 விக்கெற்றுக்கள் வீழ்த்தி முதலிடம் பிடித்ததால் அணிக்கு தேர்வு பெற்றுள்ளார். மொன்டே இதுவரை 5 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# கேலிச் சித்திரம் பிரசுரித்தமை தொடர்பில் ஐரோப்பிய நாடுகளுக்கு பின்லேடன் எச்சரிக்கை

(துபாய்)

இறைதூதர் முகமது நபியை அவதூறு செய்யும் வகையில் கேலிச்சித்திரங்களை பிரசுரிக்க அனுமதித்தமைக்காக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு கடும் தண்டனை காத்திருக்கிறது என அல்கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடன் எச்சிரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்கப் படையினர் ஈராக்கில் நிலை கொண்டு 5 வருடங்கள் பூர்த்தியாவதை யொட்டி கடந்த புதன்கிழமை இணையத்தளத்தில்வெளியிடப்பட்ட ஒலிநாடா செய்தியிலேயே பின்லேடனால் இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

ஐரோப்பியர்களின் பிரசார நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே இறைதூதரை அவதூறு செய்யும் கேலிச்சித்திரம் அனைத்து டென்மார்க் பத்திரிகைகளாலும் மீளப் பிரசுரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பின்லேடன், இப் பிரச்சார நடவடிக்கையில் பாப்பரசர் 16ஆம் ஆசீர்வாதப்பரும் சம்பந்தப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டினார்.மேற்படி கேலிச் சித்திரம் வெளியிடப்பட்ட மைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களில் குறைந்தது 50 பேர் கொல்லப்பட்டனர். இக் கேலிச் சித்திரமானது இஸ்லாத்தை அவமதிக்கும் நோக்கில் பிரசுரிக் கப்பட்டது என உலகளாவிய முஸ்லிம்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் டென்மார்க்கின் ஏனைய ஊடகங்களில் தமது ஊடக சுதந்திரத்திற்கு எவரும் தடைவிதிக்கமுடியாது எனக்கூறி சர்ச்சைக்குரிய அக் கேலிச் சித்திரத்தை கடந்த மாதம் மீளவும் பிரசுரம் செய்திருந்தன. இத்தகைய சூழ்நிலையில் அல்-கொய்தா மற்றும் அதனது ஆதரவுக் குழுக்களின் செய்திகளை வெளியிடும் எக்லாஸ் இணையத் தளத்தில் வெளியிடப்பட்ட ஒலிநாடா செய்தியில், மேற்படி கேலிச்சித்திரத்தை பிரசுரிக்க அனுமதித்தமை தொடர்பில் பின்லேடனுடையது என அடையாளப்படுத்திய குரலானது கடும் கண்டனத்தை வெளிப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

இதற்கு முஸ்லிம்கள் இயேசு கிறிஸ்துவை கேலி செய்வதன்மூலம் பழிவாங்கப் போவதில்லை. ஏனெனில் அவர்கள் இறைதூதரைப் போலவே அவரையும் கருதுகின்றனர். அல்லாஹ்வின் அதிமேன்மை பொருந்திய சட்டங்களுடன் ஒப்பிடுகையில் மனிதனின் சட்டங்கள் வலிதற்றவை என்பதுடன் அதன் பெறுமதி பூச்சியமளவானதாகும். அச் சட்டங்களைப் பற்றி எங்களுக்கு கவலையில்லை எனத் தெரிவித்த பின்லேடன் நீங்கள் உங்கள் வார்த்தைகளின் சுதந்திரம் தொடர்பில் பரிசீலிக்காவிட்டால் எங்கள் சுதந்திரமான நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டி நேரிடும் என எச்சரிக்கை விடுத்தார். (அ-5)

## பாதிரியாரின் கால்களை கழுவிய போப் ஆண்டவர்



நேற்று உலகம் முழுவதும் கிறிஸ்தவர்கள் புனித வெள்ளி கொண்டாடினார்கள். இயேசு நாதர் சிலுவையில் அறையப்படுவதற்கு முந்தைய நாளில் பெரிய வியாழன் தினத்தன்று இயேசுநாதர் சீடர்களுக்கு விருந்து கொடுத்தார்.

அப்போது சீடர்களின் கால்களை கழுவினார். இதை நினைவுபடுத்தும் வகையில் போப் ஆண்டவர் பெனடிக் வத்திக்கன் நகரில் பாதிரியார் ஒருவரின் காலை கழுவிய காட்சி. (அ-5)

# ஈராக் மீதான யுத்தக் குற்றத்துக்காக புஷ் கைது செய்யப்பட வேண்டும்

## வோஷிங்டன் ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கை

(வோஷிங்டன்)

ஈராக்கில் அமெரிக்கப் படையினர் நிலை கொண்டு 5ஆண்டுகள் நிறைவுபெறுவதை யொட்டி, கடந்த புதன்கிழமை போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்க தலைநகர் வோஷிங்டனில் நூற்றுக்கணக்கானோர் ஆர்பாட்டத்திலீடுபட்டனர்.

அமெரிக்கஜனாதிபதிபுஷ்,உபஜனாதிபதிடிக் சென்னி, இராஜாங்க செயலாளர் கொண்டலீஸா ரைஸ்ஆகியோரையுத்தக்குற்றவாளிகள் என்ற ரீதியில் கைதுசெய்யவேண்டுமென ஆர்ப்பாட்டத்திலீடுபட்டவர்கள் வலியுறுத்தினர். இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் பாதுகாப்பு பிரிவு ஒப்பந்தக்காரர்களான பெச்டெல் மற்றும் லொக்ஹீட் மார்ட்டின் ஆகியோரின் இல்லங்கள் அமைந்திருந்த கட்டடங்கள் மீது சிவப்பு வர்ணப்பூச்சுக்களை பூசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

"நாங்கள் எமது இராணுவத்தின் வீரத் திற்கு ஆதரவளிக்கிறோம்.ஆனால், போருக் கல்ல" என ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட கொல்பி டில்லார்ட் என்ற முன்னாள் படை வீரர் தெரிவித்தார். அவர் 2003 ஆம்ஆண்டு காலப் பகுதியில் ஈராக்கில் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

"உங்கள் நடவடிக்கையின்போது சிந்தப் படுவது உங்களுடையதையொத்த அதே குருதியே" என கொல்பி டில்லாட் தெரிவித்தார். பென்ஸில்வேனியா அவன்யூவிலுள்ள உள்நாட்டு வருமான சேவை கட்டடத்திற்கு வெளியே குழுமி நின்ற பொலிஸாரைக் கடந்து செல்ல ஆர்ப்பாட்டக்காரர்கள் முயற்சித்த வேளை, குறைந்தது 31பேர் கைது செய்யப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

**உலக தரிசனம்**

# இடி அமீனால் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிவாசல் லிபிய அதிபர் கடாபியால் திறந்து வைப்பு

30 வருடங்களுக்கு முன் உகண்டாவின் முன்னாள் சர்வாதிகாரி இடி அமீனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பாரிய பள்ளிவாசலொன்றின் நிர்மாணப் பணிகள், நீண்ட கால இடைவெளிக்குப் பின் பூர்த்தியடைந்து அப்பள்ளி வாசல் திறந்து வைக்கப்பட்டுள்ளது.



மேற்படி பள்ளிவாசலின் நிர்மாணப் பணிகள் நிதிப் பற்றாக்குறையால் தடைப்பட்டிருந்தபோது அதற்கு நிதியுதவி வழங்கிய லிபியத் தலைவர் மும்மார் அல் கடாபியின் பெயர், உகண்டா தலைநகரில் அமைக்கப்பட்டுள்ள இப்பள்ளிவாசலுக்கு சூட்டப்பட்டுள்ளது.



கடாபி தேசிய பள்ளிவாசல் திறப்பு விழாவில் கலந்து கொண்ட கென்யத் தலைவர் மாவெய் கிபாகி, லிபியத் தலைவர் மும்மார் கடாபி, உகண்டா தலைவர் யொவேரி முஸெவெனி, சோமாலிய தலைவர் அப்துல்லா யூஸுப், றுவண்டா தலைவர் போல் சுகமே மற்றும் புருண்டியின் தலைவர் பியர்ரே நகுருன்சிசா ஆகியோரைப் படத்தில் காணலாம்.

லிபிய தலைவரால் வைபவ ரீதியாக திறந்துவைக்கப்பட்ட இப் பள்ளிவாசலின் ஆரம்ப விழாவில் சுமார்15,000பேர்வரை கலந்து கொண்டனர்.

ஆபிரிக்காவிலேயே மிகப்பெரிய பள்ளிவாசலொன்றை நிர்மாணிக்கவேண்டும் என்பது 1979 ஆம் ஆண்டு உகண்டாவிலிருந்து வெளியேறி சவூதி அரேபியாவில் வாழ்ந்த இடி அமீனின் நீண்டநாள் கனவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பள்ளி வாசல் திறப்பு விழாவில் சோமாலியா, கென்யா மற்றும் றுவண்டா ஆகிய நாடுகளின் தலைவர்கள் உள்ளடங்கலாக பல ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர். (அ-5)

# பாகிஸ்தானின் பிரதமராக யூஸுப் ரஸா கிலானி?

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான யூஸுப் ரஸாகிலானி பாகிஸ்தானில் புதிய பிரதமர் பதவிக்கு அவரின் கட்சியால் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் புதிய தலைவரும் முன்னாள் பிரதமர் பெனாஸிரின் மகனுமான பிலாவல் பூட்டோ சர்தாரி நாடு திரும்பிய சில மணி நேரத்தில், இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டதாக கட்சியின் பேச்சாளர் பர்ஹதுல்லா பாபர் தெரிவித்தார்.

இந்நிலை யில் எதிர்வரும் வாரம் நடைபெற வுள்ள பாரா ளுமன்றக் கூட்டத்தொடரில் இது தொடர்பான அறிவிப்பு செய்யப்படும் என அவர் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக யூஸுப் ரஸா கிலானி விபரிக்கையில், தந்தி ரோபாயம் கருதி தனது கட்சியானது இதுவ ரை பிரதமர் பதவிக்கான நியமனம் குறித்து அறிவிக்கவில்லை என கூறினார்.

1993-1996ஆம் ஆண்டுகளுக்கிடைப் பட்ட காலத்தில் பெனாஸிரின் அரசாங்கத்தில் பாராளுமன்ற சபாநாயகராக பணியாற்றியவர் கிலானி என்பது குறிப்பிடத்தக்கது.

அஸிப் அலிசர்தாரி பிரதமராவதற்கான தகுதியைப் பெறும்வரை மட்டுமே அப் பதவியை வகிப்பார் என கட்சியின் உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-5)

# சீன இராணுவம் துப்பாக்கிச் சூடு பிக்குகள் உட்பட எட்டு பேர் பலி

(பீஜிங்)

தனிநாடு கோரி திபெத்தியர்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். திபெத்தை தனது ஆதிக்கத்தின் கீழ்வைத்துள்ள சீனா கலவரத்தில் ஈடுபட்டவர்கள் மீது இராணுவத்தை ஏவி தாக்குதல்நடத்தியது. இதில் 100க்கும்மேற்பட்வர்கள் பலியாகிவிட்டனர்.போராட்டக் குழுத் தலைவர்கள் புத்த பிக்குகள் உட்பட ஏராளமானவர்கள் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சிறிது நாட்கள் ஓய்ந்திருந்த இந்தக் கலவரம் மீண்டும் தீவிரமடைந்துள்ளது. தலைநகர் லாசாவில் ஏற்பட்ட கலவரம் இப்போது மற்ற மாநிலங்களுக்கும் பரவியுள்ளது. சிசுவான் மாகாணத்தில் அபா பகுதியில் தீவிரவாதிகளுக்கும் சீன பொலிஸாருக்கும் மோதல் நடந்தது. அப்போது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினார்கள். இதில் 8 பேர் பலியானதாக திபெத்தியர்கள் கூறியுள்ளனர். இதில் சிலர் புத்த பிக்குகள். இதுபற்றி திபெத்திய மனித உரிமை ஆணையம் கூறும்போது "இந்த புத்த பிக்குகள் திபெத்தின் உரிமைகோரியும் தலாய் லாமாவை நாடு திரும்ப அனுமதிக்கும்படியும் வற்புறுத்தியும்கோஷங்கள் எழுப்பி ஊர்வலம் வந்தனர். அவர்கள் மீது இராணுவம் துப்பாக் கிச்சூடு நடத்தியுள்ளது என்றுதெரிவித்துள்ளது. (அ-5)

# அமெரிக்காவில் கடும் மழை காரணமாக 13 பேர் பலி; 3 பேரைக் காணவில்லை

அமெரிக்க மாநிலங்களில் நிலவி வரும் கடும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக 13 பேர் பலியானதுடன் 3 பேர் காணாமல் போயுள்ளனர்.




மிஸ்ஸோரியில் அநேக நகர்களில் வரலாறு காணாத வெள்ளம் ஏற்பட்டுள்ளது. அர்கன்ஸாஸ், தென் இந்தியானா மற்றும் தென் மேற்கு ஒஹியோ மாநிலங்கள் வெள்ளத்தால் கடும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன.

இந்நிலையில் தேசிய காலநிலை அவதான நிலையமானது, டெக்ஸாஸிலிருந்து பென்ஸில்வேனியா வரையான பகுதிகளில் வெள்ள அபாய அச்சுறுத்தலுள்ளதாக அறிவித்துள்ளது.

அட்லான்டா, ஜோர்ஜியா ஆகிய பிராந்தியங்களில் நகரின் தாழ் பகுதியில் அமைந்திருந்த வீதிகள் பல பொலிஸாரால் மூடப்பட்டன.

வெள்ளம் காரணமாக மிஸோரியில் 5 பேரும் கென்துக்கியில் 5 பேரும் பலியாகியுள்ளனர். அத்துடன் ஒஹியோவில் 65 வயதுடைய பெண் ஒருவர் நீரில் மூழ்கி இறந்துள்ளார்.

மேலும் தென் இலினொ யிஸ் கிராமப் புற வீதியொன்றில் சென்ற வாகனமொன்று வெள்ள நீரில் அடித்துச் செல் லப்பட்ட பின் பல மணிநேரம் கழித்து இரு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. வெள்ளங் காரணமாக அர் கன்ஸாஸ் மாநிலத்தின் 16 நகர்களுக்கான வீதிகள் தடைப் பட்டுள்ளதாக அம்மாநில நெடுஞ் சாலை போக்குவரத்து பிரிவு தெரிவிக்கிறது. (அ-5)

# நான்கு ஆண்டுகளுக்கு முந்திய உயிரணு மூலம் குழந்தை!

(லண்டன்)

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர் ஜேம்ஸ் ராபர்ட்ஸ். இவர் புற்றுநோய்க்கு 33 வயதில் பலியானார்.

அவரை புற்றுநோய் தாக்கி இருப்பதை கண்டறிந்தும் அவரது டாக்டர்கள், இந்த நோய்க்கு சிகிச்சை அளித்தால் அவரது உடலில் உள்ள உயிர் அணு சக்தி இழந்து போகும் என்று எச்சரித்தனர். அதனால் சிகிச்சை தொடங்குவதற்கு முன்பு அவர் உடலில் இருந்து உயிரணு எடுக்கப்பட்டு அது பாதுகாப்பாக வைக்கப்பட்டது.

சிகிச்சை அளித்தும் பலன் இல்லாமல் அவர் கடந்த 2004 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மரணம் அடைந்தார். அவர் இறந்த துக்கம் மாறும்வரை காத்திருந்த அவர் மனைவி லிசா பாதுகாப்பாக வைக்கப்பட்ட உயிர் அணு மூலம் கருத்தரித்தார்.

இந்த கருத்தரிப்பு மூலம் கடந்த வாரம் அவருக்கு பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு ஜெமி ரோஸ் ராபர்ட்ஸ் என அவர் பெயர் சூட்டி இருக்கிறார். (அ-5)

# வெள்ளத்தின் பாதிப்பை குறைக்க விவசாயிகள் கவனிக்க வேண்டியவை

யாழ்.குடாநாட்டில் இம்மாதம் 1ஆம் திகதி தூறலாக ஆரம்பித்த மழை இன்றுவரை பெய்துகொண்டு வருகின்றது. முதலாம் திகதியிலிருந்து 16ஆம்திகதிவரை 127.1 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பெறப்பட்டுள்ளது. இதனால் நடுகை செய்யப்பட்ட மரக்கறி பயிர்கள், சிறு தானியப் பயிர்கள், பணப்பயிர்கள் என்பன நீர் தேங்கி நிற்பதால் அழுகிப் போகும் ஆபத்து நிலை தோன்றியுள்ளது.

நெல் வயல்களில் பயறு, எள்ளு போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டிருக்கும் காணிகளில் நீர்தேங்கி நிற்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இப்பயிர்களை பாதுகாப்பதற்கு சில பிரதேசங்களில் விவசாயிகள் சரிவுக்கு ஏற்ப வடிகால்களை அமைத்து நீர் வடிந்து ஓடக்கூடிய வாய்க்கால்களுடன் இணைத்துவிடுவதன் மூலம் நீரைவடித்து பயிர்களைப் பாதுகாக்க முடியும். ஒருவரின் காணியிலிருந்து மற்றையவரின் காணிக்குள் தனிப்பட்ட ரீதியாக நீரைக் கடத்துவதற்கு இயலாதநிலை காணப்படுகின்றது.

அராலிப் பகுதியில் வாய்க்கால்களில் தேங்கிநிற்கும் நீரையும், மதகு அடைபட்டுள்ளதால் தடைப்பட்டிருக்கும் வெள்ளத்தையும் படத்தில் காணலாம்.

வாய்க்காலில் தேங்கியுள்ள வெள்ள நீர்



இதேபோன்று மாகியப்பிட்டி பகுதியில் வழுக்கையாற்று கிளை வாய்க்கால்கள் ஊடாக நீர் வடிந்துவிடக்கூடிய வாய்ப்பு உள்ளது. எனினும் வாய்க்கால்களில் பற்றைகள், செடிகள் இருப்பதால் பயிர்கள் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது.

அராலி கிழக்கு, மாசியப்பிட்டி, சங்குவேலி, மானிப்பாய் போன்ற இடங்களில் நெல் அறுவடையின் பின்னரே வயல்களில் உப

வாய்க்காலில் உள்ள தடைகளை அகற்றல்



உணவுப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. வயல்களில் நெற்செய்கைக் கென அமைக்கப்பட்ட வரம்புகள் காரணமாக நீர் வடிய முடியாமல் உள்ளது. எனினும் அப் பகுதியில் பெரும்பாலான காணிகளின் அமைப்பு நீர் வடியக்கூடிய வகையில் காணப்படுகின்றது.

நீரை வடிக்கக்கூடிய வகையில் அமைந்துள்ள காணிகளில் பயிர்ச் செய்கை மேற்கொண்டிருக்கும் விவசாயிகள் ஒற்றுமையாக இணைந்து அமைப்பு ரீதியாக செயற்பட்டு நீரை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அப் பகுதி மக்கள் காணிகளுக்குரிய விவசாயிகளுடனும், மற்றும் சம்பந்தப்பட்ட அமைப்புகளுடனும் இணைந்து வாய்க்கால்களைத் துப்புரவு செய்வதன் மூலமும் நெற் செய்கைக்கென கட்டப்பட்ட வரம்புகளில் சரிவுக்கேற்ப கடவான்களை அமைப்பதன் மூலமும் தேங்கி நிற்கும் நீரைக் கடத்தலாம்.

வயல் நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் போது சரிவைநோக்கி வடிகால்களை அமைப்பதன்மூலம் நீர் தேங்குவதால் ஏற்படும் பயிரிழப்பில் இருந்து பயிர்களைப் பாதுகாக்க முடியும்.

மேலும் பயிர்களில் நோய்கள் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சாதக மான காலநிலை காணப் படுவதால் மிளகாய், கத்தரி, லீக்ஸ், தக்காளி போன்ற பயிர்களில் நோய்த்தாக்கம் ஏற்படலாம். மிள காய் பயிரில் இலைப் புள்ளி , அந்திராக்னோஸ் நோய்களும் கத்தரிப் பயிரில் அந்தி ராக் னோஸ் நோயும், லீக்ஸ் பயிரில் ஊதாப்புள்ளி நோயும், தக்காளியில் முற் கூற்று வெளிறல் நோயும் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

இதனைத் தவிர்ப்பதற்கு மழை பெய்வது நின்றவுடன் டகொனில் 75% (ந.தூ) என்னும் பங்கசு நாசினியை 20 கிராம் 10 லீற்றர் நீரில் கலந்து விசிறுவதன் மூலம் நோயத் தொற்றைத் தவிர்க்க முடியும். விசிறிய பின்னும் நோய் தொற்றிய அறிகுறிகள் அவதானிக்கப்பட் டால் 10 நாட்களின் பின் மங்கோசெப் 80% (ந.தூ) என்னும் பங்கசு நாசினியை 20 கிராம்10 லீற்றர் நீரில் கலந்து

சங்குவேலியில் வெள்ளம் தேங்கி நிற்பதால் அழிவடைந்துள்ள கத்தரித் தோட்டம்



மீண்டும் விசிறும்போது நோய்கள் தொற்றுவதில் இருந்து பாதுகாக்க முடியும்.

மழை காரணமாக மண்ணில் இருந்து நைதரசன், பொட்டாஸ் ஆகிய மூலகங்கள் வடிந்து செல்லும் நீருடன் அகற்றப்பட்டிருக்கும். இதனால் பயிர்கள் வளர்ச்சி குன்றிக் காணப்படுவதுடன் மஞ்சள் நிறமடைய வாய்ப்புகள் ஏற்படும். ஆதலால் மழை நின்றவுடன் யூரியா, மியூரியேற்ஒப் பொட்டாஸ் ஆகிய

அறுவடை செய்யப்பட்ட வெங்காயம் வெள்ளத்தை ஈடுகொள்ள முடியாத நிலையில்



பசளைகளை சிபாரிசு செய்யப்பட்ட அளவில் பயிர்களுக்கு ஏற்ப இடுவதன்மூலம் மழை யால் ஏற்பட்ட தகைப்பினை மாற்றமுடியும். பெருமழை காரணமாக அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள வெங்காயம், அறுவடை செய்து சேமித்து வைக்கமுடியாத நிலை ஏற்படும்.

இந்நிலையைத் தவிர் த்துக் கொள்வதற்காக அறுவடை செய்ய உள்ள விவசாயிகள் அறுவடைக்கு குறைந்தது 15 நாட்களுக்கு முன் காபெ ண்டசிம் (பவஸ்ரின்) என்னும் பங்கசு நாசினியை 10 கிராம் 10 லீற்றரில் நீரில் கலந்து விசிறவும். அறுவடை செய்த வெங்காயத்தை தாள்கள் நன்கு உலர்ந்த பின் சிறுபிடிகளாகக் கட்டி காற்றோட் டமுள்ள களஞ்சியங்களில் சேமிக்க வேண்டும்.

தற்போது நிலவும் ஈரமான காலநிலை காரணமாக களஞ்சியத்திலும் வளிமண்டல ஈரப்பதன் அதிகமாகவுள்ளதால் களஞ்சிப்படுத்தப்பட்டுள்ள வெங்காயுத்திலும் அழுகல் நோய் ஏற்படும் சாத்தியம் உண்டு. ஆகவே நெருக்கமாக வெங்காயப் பிடிகளை களஞ்சியப்படுத்தி வைத்திருப்போர் பிடிகளைக் கழற்றி காபென் டசிம் பங்கசு நாசினியை விசிறிய பின் காற் றோட்டமுள்ள களஞ்சியங்களில் களஞ்சியப் படுத்துவதன் மூலம் களஞ்சியத்தில் ஏற்படும் அழுகல் நோயைத் தவிர்க்க முடியும்.

சி. சிவகுமார்
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி),
யாழ்ப்பாணம்.

# விடுமுறைகளின் நாடு என்ற நிலைமையில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் -பொருளியல் வல்லுநர்கள்

மார்ச் 20ஆம் திகதி வியாழக்கிழமையும் , 21 ஆம்திகதி வெள்ளிக்கிழமையும் இலங்கையில் விடுமுறை தினங்கள். 20 ஆம்திகதி வியாழக்கிழமை நபிகள் நாயகத்தின் பிறந்த நாள் 21 வெள்ளி போயா தினம். அத்துடன் பெரிய வெள்ளி தினமாகவும் இது இருக்கிறது. தொடரும் 22,23 ஆம் திகதிகள் வார இறுதி சனி, ஞாயிறு தினங்கள் என்பதால், ஒரு நீண்ட விடுமுறைக் காலமாக இது இலங்கையில் காணப்படுகிறது.

தனியார் துறையில் சனிக்கிழமை அரை நாள் வேலை உண்டு என்றாலும், தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமையும் விடுமுறை தினம் என்பதால் சனிக்கிழமை அரைநாள் விடுமுறை எடுத்து விட்டு நான்கு நாட்களையும் ஒரு தொடர் விடுமுறையாக கழிக்கும் மனோபாவமே பலரிடம் இருக்கிறது.

ஆகமொத்தம், பொதுத்துறை, தனியார் துறை ஆகிய இரண்டுமே இந்த நான்கு நாட்களும் ஏறத்தாழ ஒரு ஸ்தம்பித நிலையிலேயே இருக்கிறது. பணவீக்கம் என்றுமில்லாதவாறு அதிகரித்து, வர்த்தகத்துறை பாதிக்கப்பட்டு, வாழ்க்கைச் செலவு அதிகரித்திருக்கும் இலங்கையின் தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் இவ்வாறான நீண்ட விடுமுறை இலங்கைக்குப் பொருந்துமா என்ற கேள்வி பொருளியல் வல்லுநர்களால் எழுப்பப்படுகிறது.

இந்த நான்கு நாள் தொடர் விடுமுறை குறித்து இலங்கையின் வர்த்தக வானொலிகளில் பெருமளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு நேயர்கள் மகிழ்வூட்டப்படுகிறார்கள். இந்தத் தொடர் விடுமுறை குறித்து மக்கள் ஆனந்தப்பட்டாலும், வர்த்தகத்துறையினர் இதனால் பாதிக்கப்படவே செய்கிறார்கள்.

இது தமக்கான ஒரு ஓய்வுக் காலம் என பொதுவாக வேலை செய்பவர்கள் கருதுகிறார்கள். எனினும், வேலைக்கும், ஓய்வுக்கும் இடையிலான சமநிலை இலங்கையில் எவ்வளவு தூரம் சரியாகப் பேணப்படுகிறது என்று பொருளியலாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

### ஓய்வில் கழியும் அரை வருடம்

ஒப்பீட்டு ரீதியில் இலங்கையின் பொதுத் துறை சார்ந்தவர்கள் அதிகளவு விடுமுறை தினங்களை அனுபவிக்கின்றனர். 14 பொது விடுமுறை தினங்கள், 12போயா விடுமுறை தினங்கள் (இவற்றுள் சில சனி, ஞாயிறில் வருவதுண்டு). எல்லோருக்கும் பொதுவாகக் கிடைப்பதுடன், 21 அமைய (casual) விடும்றை, 24 விடுப்பு விடுமுறை, 14 உடல் நலக்குறை விடுமுறை என்பவற்றையும் இவர்கள் எடுக்க முடியும் என்பதால், மொத்தமாக 85 விடுமுறை தினங்கள் இவர்களுக்குக் கிடைக்கிறது. இவற்றுடன் 104 வார இறுதி விடுமுறைகளையும் சேர்த்தால் மொத்தம் 189 விடுமுறை தினங்கள் பொதுத்துறை சார்ந்தவர்களுக்குக் கிடைக்கிறது. ஆக, வருடத்தின் 365 நாட்களில் 176 தினங்களே இவர்களுக்கு வேலை நாட்களாக இருக்கிறது. அரை வருடத்துக்கும் அதிகம் விடுமுறையில் கழிகிறது.

தனியார் வர்த்தகத்துறையைச் சார்ந்தவர்கள் 8 நிலையான விடுமுறை தினங்களைப் பெறுவதுடன், சட்டப்படி 14 வருடாந்த விடுப் புகளையும், 7 அமைய விடுப்புக்களையும் மட்டுமே பெறுகின்றனர். பொதுத்துறை சார்ந்தவர்களுடன் ஒப்பிடும்போது இது மிகவும் குறைவான விடுமுறைக்காலமாகவே இருக்கிறது.

இவ்வாறான தொடர் விடுமுறை தினங்கள் இலங்கையின் உற்பத்தித்துறையை மாத்திரமின்றி சேவைத்துறையையும் பாதிக்கவே செய்கிறது. சேவைத்துறை சார்ந்த பல்வேறு செயற்பாடுகள் இவ்வாறான நீண்ட விடுமுறைக் காலங்களால் இழுத்தடிக்கப்படுகிறது. ஆக மொத்தம், பொருளாதாரத்தில் இவ்வாறான அதிகரித்த விடுமுறை தினங்கள் கணிசமான ளவு தாக்கத்தைச் செலுத்தவே செய்கிறது.

இவ்வாறான தொடர் விடுமுறைக் காலங்களால் ஏற்படும் பொருளாதார நட்டங்களை ஈடு செய்வது யார்? நிச்சயமாக அரசாங்கம் அல்ல. வரி செலுத்துவோரும், நுகர்வோருமே ஈற்றில் இந்த நட்டங்களைத் தாங்கவேண்டியிருக்கும். ஆக, குறைந்தபட்சம் இலங்கையின் இன்றைய பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டாயினும் இந்த விடுமுறைக் கலாசாரத்தில் மாற்றமொன்று ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமாகவே இருக்கிறது என்று பொருளியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

### மத விடுமுறைகள்

விடுமுறை தினங்களில் பலவும் மதம் சார்ந்தவையாக இருப்பதால் அவை குறித்து கவனம் செலுத்துவது அவசியமாக இருப்பதாக பொருளியல் வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர். மதம் சார்ந்த விடுமுறைகள் குறிப்பிட்ட மத வழிமுறைகளைப் பின்பற்றுபவர்களுக்கு மட்டுமானதாக மட்டுப்படுத்தலாம் என்று அவர்கள் ஆலோசனை கூறுகின்றனர்.

உதாரணமாக, முஸ்லிம்களின் ஜும்மா வழிபாட்டுக்கான விடுமுறை நேரம் அந்த வழிபாட்டில் ஈடுபடும் முஸ்லிம்களுக்கு மாத்திரமானதாகவே இருக்கிறது. இதேபோல், பௌத்தர்கள் அல்லாதோருக்கு போயா தினத்தை வேலை நாளாக மாற்றலாமே என்று அவர்கள் ஒரு ஆலோசனையை முன்வைக்கின்றனர்.

எத்தனை பௌத்தர்கள் போயா விடுமுறை தினத்தில் உண்மையாகவே மத அனுட்டானங்களில் ஈடுபடுகிறார்கள் என்ற ஒரு ஆய்வைச் செய்து பார்ப்பதும் சுவாரஸ்யமான ஒரு விடயமாக இருக்கும் என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர். குறைந்த பட்சம் தனியார் வர்த்தகத் துறையிலாயினும் இந்த நடைமுறைகள் பின்பற்றப் படுவது பொருத்தமானதாக இருக்கும் என்று ஆலோசனை கூறும்இவர்கள், இதன் மூலம் பெருமளவு மனித வலு உற்பத்தித் துறைக்குக் கிடைப்பனவாக இருக்கும் என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

மத, கலாசார விழுமியங்களைப் பேணவும், சமூக வாழ்வில் ஈடுபடவும் விடுமுறை தினங்கள் அவசியமானதே என்பதை ஏற்றுக்கொள்ளும் பொருளியல் வல்லுநர்கள். எனினும், இந்த விடுமுறை தினங்களில் ஒட்டுமொத்த நலன்கள் எவை? அவற்றால் தேசத்துக்கு ஏற்படும் பாதிப்புக்கள் என்ன என்பது குறித்துச் சிந்தித்துப் பார்ப்பது குறைந்தபட்சம் இன்றைய காலகட்டத்தில் அவசியமானது என்றும் கூறுகின்றனர். விடுமுறை தினங்களை, விசேட சம்பளத்துடன் கூடிய வேலை தினங்களாக மாற்றுவது கூடுதல் நன்மை பயக்கும் விடயமாக இருக்காதா என்பது குறித்தும் பரிசீலிக்கலாம் என்பது அவர்களின் மற்றுமொரு ஆலோசனை. (அ-5)

நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும்
பெருமை உடைத்து இவ் உலகு.
-திருக்குறள்

வலம்புரி

## வெந்து சாம்பலாகி தமிழ் மணம் பரப்பவோ சென்றனை பண்டிதர் ஐயா

தமிழ்அறிஞர் மதுரைப் பண்டிதர் சச்சிதானந்தம் ஐயா அவர்கள் நேற்றைய தினம் காலமானார் என்ற செய்தி தமிழ் உலகிற்கு பேரிழப்பை தருவதாகும்.

ஈழத்தின் தமிழ் அறிஞர்களில் முதன்மையானவராக தமிழ் கூறும் நல்லுலகம் அவரைப் போற்றி வந்தது. பன்மொழிப்புலவராக, சமுதாய மாற்றத்தின் சிற்பியாக விளங்கிய பண்டிதர் சச்சிதானந்தம் அவர்கள் தமிழ் அன்னைக்குச் செய்த பணியை ஈழத்தமிழ் மண் என்றும் மறந்து விடமாட்டாது.

அவரினால் தரப்பட்ட ஆக்க இலக்கியங்கள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் பெருந்துணையாகிற்று.

'சாவிலும் தமிழ் படித்துச் சாகவேண்டும்; எந்தன்; சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்' என்ற கவிதை வரிகளின் சொந்தக்காரர் பண்டிதர் சச்சிதானந்தம் ஐயா அவர்களே எனினும் அந்தக் கவிதைச் சிறப்பினால் அது பாரதிதாசனின் கவிதை வரிகள் என எண்ணுவோரும் உண்டு.

பாரதிக்கு, பாரதிதாசனுக்கு நிகராக கவிதை இயற்றும் திறன் ஈழத்துப் புலவர்களில் பண்டிதர் சச்சிதானந்தம் அவர்களுக்கே உரியதெனில் அது மிகையன்று.

தமிழ், ஆங்கிலம்,சமஸ்கிருதம் உள்ளிட்ட பல மொழிகளில் அதீத பாண்டித்தியம் பெற்ற பண்டிதர் அவர்கள், தமிழின் பெருமையை உலகமறியும்பொருட்டு ஆங்கிலத்திலும் தமிழின் சிறப்பை வெளியிட்டு தமிழ் மொழியின் இனிமையை உலகறியச் செய்தார்.

அவரிடம் கற்ற மாணவர்கள் பலர் பேராசிரியர்களாக, தமிழ் வித்துவான்களாக, பேரறிவாளர்களாக விளங்குகின்றனர்.

பண்டிதர் சச்சிதானந்தம் அவர்களின் தமிழ்ப் புலமையை– அவர் ஆற்றிய தமிழ்ப் பணியை கௌரவித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவருக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கியது.

பண்டிதர் ஐயாவுக்கு கலாநிதிப்பட்டம் வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தகைசான்ற அறிஞர் பெருமகனை கௌரவித்த புகழுக்கு உரித்தாயிற்று.

இதற்கப்பால் அவர் இலண்டன் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்று தமிழ் மண்ணிற்குப் பெருமை சேர்த்தார். இத்தகைய பல்வகைப் பெருமைக்குரிய பண்டிதர் சச்சிதானந்தம் ஐயா எளிமையான தோற்றம், ஆடம்பரமற்ற வாழ்க்கை, ஆணவமற்ற கல்விப் புலமை இத்தனை சிறப்பிற்கும் உரித்தானவர்.

அவர்களின் மறைவு தமிழுக்கு ஏற்பட்ட பேரிழப்பு. அந்த இழப்பின் மற்றுமோர் இழப்பாக 'மதுரைப் பண்டிதர்' என்ற மகுடப் பெயரும் நம்மிடம் இருந்து விடைபெற்றுக் கொள்கின்றது என்பது இழப்பின் வேதனையை இரட்டிப்பாக்கக் கூடியதாகும்.

# இலங்கை தொடர்பான இந்தியாவின் அணுகுமுறை மாற்றப்பட வேண்டும்

## கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் டி.ராஜா வலியுறுத்தல்

இலங்கை தொடர்பான இந்தியாவின் அணுகுமுறை மாற்றப்பட வேண்டும் என்று இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்தியச் செயலாளரும் தமிழ் நாட்டிலிருந்து தெரிவு செய்யப்பட்டவருமான டி.ராஜா வலியுறுத்தியுள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கை அறிக்கை கடந்த புதன்கிழமை இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்டது. அந்த அறிக்கை மீதான விவாதத்தின் போது ராஜா பேசியதாவது,

இலங்கை அரசாங்கமும் அமெரிக்க அரசாங்கமும் இராணுவ ஆதரவு தொடர்பிலான ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளன. ஆனால் இந்திய அரசாங்கம் இதுவரை அந்த ஒப்பந்தம் தொடர்பில் எதுவித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

அணிசேரா நாடுகளின் தலைமைப் பொறுப்பு வகித்தது இந்தியா ஆனால் இப்போது அது எங்கே போனது? அணிசேரா கொள்கையே இந்தியாவின் கொள்கை என உங்களால் இப்போது கூற முடியுமா? மேற் காசியாவில் இஸ்ரேலை தம்பக்கம் வைத்திருப்பது போல் தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியாவை தம் பக்கம் வைத் துக் கொள்ள அமெரிக்கா முயற்சிக்கிறது. இஸ்ரேல் வகிக்கும் பாத்திரத்தை இந்தியா வகிக்க அமெரிக்கா விரும்புகிறது.

அதனைநாம்ஒப்புக்கொள்கிறோமா? இந்த ஆசியப் பிராந்தியத்தில் தனது மேலாதிக்கத்தை நிலை நிறுத்த அமெரிக்கா முயற்சிக்கிறது. அதனை நாம் ஒப்புக்கொள்ளக்கூடாது. இலங்கை நிகழ்வுகள் அதனையே நமக்கு உணர்த்துகின்றன.

இங்கே இலங்கை நிலைமை பற்றி என்னுடைய நண்பர் அ.தி.மு.க.உறுப்பினர் இலங்கை சிறார்கள் எப்படி படுகொலை செய்யப்படுகிறார்கள்? இலங்கையில் விதவைப் பெண்கள் எப்படி துன்பத்துக்குள்ளாகிறார்கள்? பொதுமக்கள் அங்கே எப்படி பாதிக்கப்படுகிறார்கள்? என்பது குறித்து அவர்நிச்சயம் பேசவேண்டும். அவர் அதனைவிடுத்து மற்றவை பற்றிப் பேசினார்.

கச்சதீவு விடயம் ஒரு கவலைக்குரியதுதான். கச்சதீவு ஒப்பந்தத்தை மேற்கொண்டது யார்? அந்த ஒப்பந்தம் மத்திய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டது. அது மாநில அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் அல்ல. ஆகையால் கச்சதீவு தொடர்பில் மாநில அரசாங்கத்தை நீங் கள் குற்றம் சாட்ட இயலாது.

சிறிலங்கா அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் இடையேயான ஒப்பந்தம் அது. அந்த ஒப்பந்தத்திலே ஏதாவது மாற்றங்களைச் செய்ய வேண்டுமாயின் நம்மால் செய்ய முடியும். இன்றைய நிலையில் கச்சதீவு ஒப்பந்தத்தை மறுபரிசீலனைசெய்யவேண்டிய தேவையுள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் தொடர்ந்து இப்படிசெயற்படுமேயானால் (தமிழ்நாட்டுமீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினால்) நாம் அத்தகைய செயற்பாடுகளை சகித்துக்கொண்டிருக்க முடியாது. சிறிலங்கா கடலில் கண்ணிவெடிகளை எப்படிப் போட்டது? இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று நேற்றுக்கூட நான் கேள்வி எழுப் பினேன்.

இங்கே பாதுகாப்பு அமைச்சர் இப்போதும் அமர்ந்திருக்கிறார்-வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் அமர்ந்திருக்கிறார். நமக்கு அருகாமையில் உள்ள ஒரு நட்பு நாடு, கடலிலே கண்ணி வெடிகளை புதைக்கின்றபோது மத்திய அரசாங்கத்தினது நிலைப்பாடு என்ன? அது எந்த வகையிலாவது அனைத்துலக நடைமுறைகளுக்கு உகந்ததா? இதற்கு எப்படி விளக்கம் அளிப்பீர்கள்? ஏன் இந்தியா மௌனம்காக்கிறது?

அங்கே உள்ள போர்ச் சுழல் தமிழர்களுக்கு எதிரான போராக மாறிவருகிறது. நான் எந்த ஒரு குறிப்பிட்ட அமைப்புக்காகவும் வாதாடவில்லை. தமிழ் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற அடிப்படையில் பேசுகிறேன்.

"அங்கே (இலங்கையில்) இராணுவ வழித்தீர்வில் சாத்தியமில்லை." என்று பிரணாப் முகர்ஜி தனது அறிக்கையில் (இந்திய வெளிவிவகார அறிக்கையில்) தெரிவித்துள்ளார். மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால் அது பதில்அல்ல.

ஒவ்வொருவரும் அரசியல் வழித்தீர்வுக்காக கடுமையாக முயற்சிக்கின்றனர். ஆனால் என்ன அரசியல் தீர்வு? இந்திய அமைதிப் படை காலத்தை 13 ஆவது சரத்து இப்போது பேசுகின்றனர். உண்மையில் இந்திய அமைதிப்படை தொடர்பிலான இந்திய - சிறிலங்கா ஒப்பந்தத்தில் உண்மையிலே அது இடம்பெற்றிருக்குமேயானால் அது பற்றிய இப்போதைய நிலைப்பாடு என்ன?

இத்தகைய விடயங்களுக்கும் நாம் இப்போது முகம் கொடுக்க வேண்டும். இந்தியா ஆக்கபூர்வமான சக்தியாக செயற்பட வேண்டும். நமது பிராந்தியத்தில் அமெரிக்கா மேற்கொள்ளும் நாசகார நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராட முயற்சிக் க வேண்டும்.

பாகிஸ்தான் வங்கதேசம் மற்றும் நேபாளம் ஆகியநாடுகளில் இந்தியா மேற்கொண்டுள்ள யதார்த்த பூர்வ அணுகுமுறைகளை நாம் பாராட்டுகிறோம்.

ஆனால் தெற்கே தென்னிந்தியாவில் இந்து மா சமுத்திரம் , இலங்கை தொடர்பில் தனது அணுகு முறையை இந்தியா மாற்றிக் கொள்ளவேண்டும். குறிப்பாக இராணுவ மோதல் நிகழும் இலங்கை தொடர்பான இந்தியாவின் அணுகுமுறை மாற வேண்டும் என்றார் அவர். (அ-5)

# கிழக்குத் தேர்தலில் த.ம.வி.பு.உடன் கூட்டணி அமைக்க சு.க.தீர்மானம்!

(கொழும்பு)

மே மாதம் நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபை தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் மற்றும் ஹெல உறுமயவுடன் இணைந்து போட்டி யிடுவதற்கு தீர்மானித்துள்ளது. சுதந்திர கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான குழுக்கூட்டத் திற்கு முன்னதாக நடைபெற்ற சந்திப்பிலேயே இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அதற்கு சம்பந்தப்பட்ட தரப்புக்கள் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகின்றது.

சுதந்திரக்கட்சியின் சார்பில்போட்டியிட உள்ள வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் பொதுச்செயலாளர் மைத்திரி பால சிறிசேன தலைமையில் நடைபெற்று வருகின்றது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி பங்காளிக்கட்சிகளுடன் முக்கிய சந்திப்பொன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும்

ஏனைய சிறுபான்மைக் கட்சிகளையும் இணைத்துக்கொண்டு கூட்டணியில் களத்தில்குதிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவருவதாகவும்சுதந்திரக்கட்சி வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

இதன் ஒரு கட்டமாகவே முஸ்லிம் காங்கிரஸ் தலைவருடன் பாராளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஸ சந்திப்பொன்றை நடத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் முஸ்லிம்காங்கிரஸ் அதிஉயர் பீடத்தில் ஆராயப்பட்டதன் பின்னரே முடிவெடுக்கப்படும் என்று முஸ்லிம் காங்கிரஸ் ஏற்கனவே அறிவித்துள்ளது.

இதேவேளை எதிர்வரும்25 ஆம் திகதி கூடுகின்ற ஐக்கிய தேசியக்கட்சியின் நிறைவேற்று குழுக் கூட்டத்தில் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டி யிடுவது தொடர்பாக தீர்மானிக்கப்படவிருப்பதாக கட்சி வட்டாரங்களில்இருந்துதெரியவருகின்றது. (அ-5)

# உயிர்ப்பின் சமாதானம் மண்ணில் மலரட்டும்

கோதுமை மணி மண்ணில் வீழ்ந்து மடிந்தாலொழிய மிகுந்த பலன் தரமுடியாது என்று கூறிய யேசுக்கு கல்லைறையா? நானே உயிர்தரும் உணவு என்றவருக்கு மரணமா? ஆதவனை இருள் வெற்றி கொள்ளுமா?


## தவக்காலப் பொழிவு

ஆம் கல்லறைக்குள் பேரொளியை வைத்துவிட்டு அலகை ஆட்சி நடத்தலாம் என எண்ணியது. அதன் நிழல் வெற்றி, நிஜம் உயிர்த்ததால் தோற்றுப் போனது.

ஏனென்றால் காலங்களையும் யுகங்களையும் கடந்துவரும் ஆட்சியும் மாட்சியுமான இறை ஒளி மண்ணுக்குள் அடங்கவில்லை. மீட்புத் திட்டத்தை நிறை வேற்ற மண்ணில் வீழ்ந்த கிறிஸ்து என்னும் விதை கிறிஸ்தவப் பெருவிருட்சமாக முளை கொண்டு எழுச்சிபெற்றது. உயிர்ப்பும் உயிரும் நானே வென்றவாறு யேசு உயிர்த்து திருச்சபையின் விசுவாசத்திற்கு வலுச் சேர்த்தார். அநீதியை வென்று நீதியை நிலைநிறுத்திய சமாதானத்தின் அரசராக கல்வாரிக் களமாடி தன் மெய்யால் விடுதலை தந்தார்.

இந்த உயிர்ப்பின் புதுப்பிறப்பின் மகிழ்வில் முழுமையுடன் பங்கு கொள்ள எமது உள்ளங்கள் புதுப்பிறப்பெடுத்து தோன்றும் எண்ணங்கள் உயிர்ப் படைய வேண்டும்.

பிறகும் உயிர்ப்புடன் வாழ வழிய மைக்க வேண்டும். எமது பாவங்கள் பழையவாழ்வு முறைகளைக் கல்லறைக்குள் புதைத்துவிட்டு யேசுவோடு



உயிர்தெழுவோம்.

நாம் புதிதாகத் தொடக்கும் புதுவாழ்வு கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு சான்றுபகர்வதாக அமையட்டும். "கிறிஸ்துவின் சமாதானம் அனைவரோடும் தங்குவதாக" அல்லேலுயா! அல்லேலுயா!

எஸ்.யேசுதாஸ்

## புலமைப் பரிசில் பரீட்சை விண்ணப்ப முடிபுத் திகதி நீடிப்பு

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை விண்ணப்ப முடிபுத் திகதி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதிவரை நீடித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

முடிபுத் திகதி எதிர்வரும் 25 ஆம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பினை சகல பாடசாலைகளுக்கும் வழங்கும் நோக்கில் விண்ணப்ப முடிபுத் திகதியை நீடித்துள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 9 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளார். கடந்த டிசம்பர் மாதம் இடம்பெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் பாடசாலை விடுமுறைக்கு முன் வெளியிடப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ச-2)

## சிறப்பு அதிரடிப்படையின் தலைமைப் பொறுப்பில் மாற்றம்

(கொழும்பு)

பொலிஸாரின் சிறப்பு அதிரடிப் படையின் தலைமைப் பொறுப்புக்குப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் கே.எம்.எல்.சரத் சந்திர நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேநேரம் பொலிஸின் விசேட அதிரடிப் படையின் தலைமைப் பொறுப்பிலிருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமல் பெல்கே நீக்கப்பட்டு அவர் மேற்குப் பிராந்தியத்தின் வடபிராந்தியப் பகுதிகளின் நடவடிக்கைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (ச-5)

## இரு தமிழ் இளைஞர்கள் மதவாச்சியில் கைது

(மன்னார்)

மன்னார் நகர் சின்னக்கடையைச் சேர்ந்த இரு தமிழ் இளைஞர்கள் புதன்கிழமை இரவு அநுராதபுர பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இவர்களை விசாரணைகளுக்குட்படுத்தி வருவதாகவும் இவர்கள் மீது மதவாச்சி காட்டுப் பகுதியூடாக ஜெனிக்கனைட்குச்சிகளைக் கடத்திச் செல்ல முற்பட்டதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (ச-5)

## வடபோர்...

அதிரடிப் படையினர் மீண்டும் சண்டையில் ஈடுபடுத்தப்படுவது முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறுப் பகுதியில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளுக்கு வலுச் சேர்க்கும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார். (ச-2)

தரம் : 4. 2009 புலமைப்பரிசில்
வெற்றித்தேர்வு கணேசலிங்கம்
நாடு முழுவதும் வெளியீடும்
வெற்றித்தேர்வு 15 தொடர்பரீட்சை வினாத்தாள்கள்
இப்போதே பதிவுசெய்து கொள்ளுங்கள்.
தொலைபேசி இலக்கங்கள்
வட.மராட்சி.0212263815. தென்மராட்சி.0778466208
வலிகாமம். 0602217191. தீவகம். 0602216278
பிரதானமையம்: யாழ்நகரம்: 0212229016 0773126807
பாடசாலைகள்,கல்விநிறுவனங்களுக்கு விசேட சலுகைகள் உண்டு
வெளிவந்துவிட்டது !!
தரம் :5 வெற்றித்தேர்வு — 10

# ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளியை விசாரிக்கக் கோரி வழக்குத் தொடரத் திட்டம்

(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையின் உண்மைக் குற்றவாளி சுப்பிரமணிய சுவாமியை விசாரிக்கக் கோரி இந்தியத் தலைமை நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவுள்ளதாக காங்கிரஸ் கட்சியின் திருச்சி வேலுச்சாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் வியாழக்கிழமை திருச்சி வேலுச்சாமி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்களை நேசித்த இளம் தலைவர் ராஜீவ் காந்தி மறைந்து ஏறத்தாழ 17 ஆண்டுகள் கடந்தும் உண்மைக் குற்றவாளிகள் கைது செய்யப்படாததும் சதிகாரர்கள் கண்டறியப்படாததும் இந்தத் தேசத்தின் இறையாண்மைக்கு விடப்பட்ட சவால்.

இந்தியர்கள் அனைவருக்கும் மாபெரும் அவமானம். இந்தப் படுகொலையின் காரணமாகப் பல அப்பாவித் தமிழர்கள் கைது செய்யப்பட்டும் பல்வேறு துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஆளாக்கப்பட்டனர் என்பது கசப்பான உண்மை.

ஆனால் அந்தக் கொலைச் சதியில் சம்பந்தப்பட்ட சதிகாரர்களில் சிலர் அரசின் பாதுகாப்போடு மகிழ்ச்சியாக இன்றும் வலம்வந்து கொண்டிருக்கின்றார்கள் என்பது வேதனையான உண்மை.

ராஜீவ் படுகொலைக்கு மூளையாகச் செயற்பட்ட குள்ளநரிக்கூட்டம் தங்களின் சாமர்த்தியத்தால் ஒரு சிலரைப் பலிக்கடாவாக்கி விட்டு வழக்கை முடித்து விட நினைத்தது. நல்ல வேளையாக அப்படி நடைபெறவில்லை.

தமிழர்களின் மீது விழுந்த இந்தப் பலி இன்றளவும் நிலைக்க, தமிழினப் பகைவர்களும் ஏகாதிபத்திய சக்திகளும் காரணமாக இருந்தாலும் ஒரு சில தமிழகத் தலைவர்களின் சுயநலமும் காரணம் என்பதனை மறுக்க முடியாது.

குஜ்ரால் தலைமையில் நடைபெற்ற மத்திய அரசில் தி.மு.கழகத்தைச் சேர்ந்த 2 அமைச்சர்கள் அங்கம் வகித்தபோது தலைவர் ராஜிவின் கொலைக்குக் காரணமான தி.மு.கழக அமைச்சர்களை நீக்காவிட்டால் ஆட்சியைக் கவிழ்ப்போம் என்று எச்சரித்த காங்கிரஸ் சொன்னபடியே அந்த ஆட்சியைக் கவிழ்த்தது.

அதே காங்கிரஸ்தான் இப்போது தனது தலைமையில் நடைபெறுகின்ற மத்திய அரசில் தி.மு.கழகத்தைச் சேர்ந்த 7 பேர்களை அமைச்சர்களாக வைத்திருக்கின்றது.

இந்த கடந்த காலத் தவறுகளைக் களைந்து விட்டு பொறுப்பான சில பணிகளைச் செய்ய வேண்டிய கட்டாயம் தமிழர்கள் அனைவருக்கும் இருக்கின்றது. இந்த கோரக் கொலையின் வாயிலாக தமிழனத்தின் மீது களங்கமும் தீராப் பழியும் சுமத்தப்பட்டிருக்கின்றது என்பதனை மறுப்பதற்கில்லை.

தமிழனத்தின் மீது சுமத்தப்பட்டிருக்கின்ற கறையைத் துடைக்க வேண்டுமானால்உண்மைக் குற்றவாளிகள் கண்டறியப்பட வேண்டும். அது இன்றைய தலைமுறைத் தமிழர்களின் வரலாற்றுக் கடமையாகும் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## கிழக்கு மாகாண சபைத் தேர்தல் கட்டுப்பணம் செலுத்த அறிவிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணத்தை எதிர்வரும் 2 ஆம் திகதி 12 மணிவரை மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகங்களில் செலுத்த முடியும் எனத் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

மேலும் சுயேட்சைக் குழுக்கள் வேட்பாளர் ஒருவருக்கு 2 ஆயிரம் வீதம் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 வேட்பாளர்களுக்காக 28 ஆயிரம் ரூபாவும் அம்பாறை மாவட்டத்தில் 17 வேட்பாளர்களுக்கு 34 ஆயிரம் ரூபாவும் திருகோணமலை மாவட்டத்தில் 13 வேட்பாளர்களுக்கு 26 ஆயிரம் ரூபாவாவும் கட்டுப்பணமாகச் செலுத்த வேண்டும் என மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ரி.கிருஷ்ணாநந்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மே மாதம் இடம்பெறவுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தலின்போது அம்பாறை மாவட்டத்திலிருந்து 14 உறுப்பினர்களும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 11 உறுப்பினர்களும் திருகோணமலை மாவட்டத்திலிருந்து 10 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர் என்றார். (ச-5)

## மதுரை பண்டிதர் சச்சிதானந்தம்...

பினராகவும் இருந்துள்ளார். 1978 இல் லண்டன் உளவியல் ஆய்வில் கலாநிதிப் பட்டம் பெற்றார். இவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமும் இலக்கியக் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

இலங்கை வானியல் கழகத்தின் உப தலைவராக 1980 தொடக்கம் பண்டிதர் பணி புரிந்துள்ளார். இவர் நாடகம், கவிதை, சிறுகதை, ஆய்வுக் கட்டுரைகள் எனப் பல ஆக்கங்களை எழுதியுள்ளார்.

இவர் எழுதிய தண்ணீர்த் தாகம் என்ற சிறுகதை இலங்கையிலுள்ள சாதிப்பிரச்சினையை மையமாக வைத்து எழுதப்பட்ட முதலாவது சிறுகதையாகும். இவர் ஈழத்தின் சிறுகதை முன்னோடிகளில் ஒருவராகவும் கொள்ளப்படுகின்றார்.

1954 இல் இவரின் ஆனந்தத் தேன் என்ற கவிதைத் தொகுதி இந்தியாவில் வெளிவந்தது. தமிழர் யாழியல், மாவை முருகன், மாவை சிந்து, யாழ்ப்பாணக் காவியம், இலங்கைக் காவியம் போன்ற தமிழ் நூல்களைப் பண்டிதர் சச்சிதானந்தம் வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணக் காவியம் என்ற நூல் 1998 ஆம் ஆண்டுக்கான இலங்கை அரசின் சாகித்திய அக்கடமிப் பரிசும் வடக்குக் கிழக்கு மாகாண அமைச்சின் ஆளுநர் விருதும் சம்பந்தன் விருதும் பெற்றுக் கொண்டது.

இவர் ஆங்கிலத்திலும் புத்தகம் எழுதியதோடு சிறுவர் பாடல்கள், மஞ்சுகாவியம், பருவப் பாலியல் படும்பாடும், தொல்காப்பிய ஆய்வு போன்ற நூல்களையும் எழுதியுள்ளார்.

இதேவேளை மதுரைப் பண்டிதர் சச்சிதானந்தத்தின் இறுதி நிகழ்வுகள் மிகவும் எளிமையான முறையில் நடைபெற்றதுடன் அவரின் வேண்டுகோளுக்கிணங்க 24 மணி நேரத்தினுள் நேற்று தகனம் செய்யப்பட்டது. (ச)

## சுனாமியில்...

சிறுவனைக் கண்டுபிடித்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மிகிந்தலைப் பகுதியிலிருந்து சிறுவனைப் பொறுப்பேற்கும்போது 19 வயதுடைய இளைஞன் ஒருவரிடமிருந்து பொறுப்பேற்றதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சிறுவன் நேற்று முன்தினம் ஹெப்பிட்டிக்கொல்லாவ நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளான். விசாரணைகள் முடியும் வரை சிறுவனைத் தினமும் நண்பகல் 12 மணிவரையும் ஹெரவப்பொத்தானைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மனிதாபிமான காரணங்களுக்காக சிறுவனை நன்நடத்தைப் பாடசாலைக்கு அனுப்பி வைக்காமல் குறிப்பிட்ட இளைஞனின் பொறுப்பிலேயே இருக்க வேண்டும் என நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச-2)

## சிறுபான்மையின மக்கள்...

இலங்கையில் அண்மைக் காலமாக வன்முறைகள் அதிகரித்து பதற்றம் நிலவுவதைத் தாம் அவதானிப்பதாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இதனைத் தணிப்பதற்கு இராணுவ நடவடிக்கை ஒருபோதும் தீர்வாகாது என நாம் உறுதியாகக் கூறுகின்றோம் எனக் கூறப்பட்டுள்ளது. இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் வருடாந்த அறிக்கை நேற்று முன்தினம் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கைகள் மூலம் தீர்வு கிடைக்கப் போவதில்லை. மாறாக ஐக்கிய இலங்கைக்குள் சகல மக்களும் குறிப்பாக சிறுபான்மை மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஓர்அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கைக் கடற்படைக்குப் பயிற்சி அளிக்கப்பட்டமை தொடர்பில் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வெளிநாட்டவர்களுக்குப் பயிற்சியளிப்பதுபோன்று இலங்கைக் கடற்படையினருக்கும் இந்தியா பயிற்சியளிக்கின்றது. ஐ.என்.எஸ்.; கிருஷ்ணா பயிற்சியகங்கள் மூலம் இலங்கை மற்றும் மாலைதீவுக் கடற்படையினருக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

பொதுவாக ஆபத்திலிருந்து எவ்வாறு காப்பாற்றுவது. ஆபத்தில் சிக்கி சேதங்களுக்குள்ளானவற்றை எவ்வாறு அப்புறப்படுத்துவது என்பன தொடர்பாகவே இப் பயிற்சி வழங்கப்பட்டது.

இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த 42 பேரும் மாலைதீவைச் சேர்ந்த ஐவரும் கடந்த வருடம் செப்ரெம்பர் 21 ஆம் திகதி முதல் ஒக்டோபர் மூன்றாம் திகதி வரை இப் பயிற்சியை பெற்றுள்ளனர் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

## அரசியல்...

ஈடுபடுத்தப்படுவதாகத் தனக்குத் தகவல் கிடைத்துள்ளதாக முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை நேரத்தில் மாணவர்களைத் தமது தேவைக்காகப் பயன்படுத்திக் கொள்வது தவறெனக் கருதியதுடன் பாடசாலை செல்லாத நாள்களிலும் பாடசாலைச் சீருடையுடன் மாணவர்கள் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவது தவறானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மாணவர்களை அழைத்து அவர்களுக்கு கட்சி அரசியலைப் புகுத்துவது சிறந்த நடவடிக்கையல்ல என்றும் அதனைக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களை அதிபரின் அனுமதியில்லாமல் பாடசாலைக்கு வெளியே அரசியல் நிகழ்வு ஒன்றுக்கு அழைத்துச் செல்வது தவறானதெனவும் இது தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ச-2)

## பிறந்தநாள் வாழ்த்து

செல்வி றஞ்சன் றெலீனா 22.03.2008

எமது நிறுவனத்தில் பணிபுரியும் றஞ்சன் றெலீனா இன்று (22.03.2008) 21-வது பிறந்த தினத்தைத் தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடுகின்றார். அவரை பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

*APEX HOSPITAL (PVT) LIMITED*

நிர்வாக உறுப்பினர்கள்,
முகாமையாளர், ஊழியர்கள்.

(C-924)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கந்தர்மடம் உடையார் ஒழுங்கையில் வசிக்கும்

கேதீஸ்வரநாதன் ஆதித்தன்

(பொது முகாமைத்துவ உதவியாளர், பொதுநிர்வாக செயலகம், திருகோணமலை)

சென்ற ஆண்டு யாழ்.உயர் தொழில்நுட்பக் கல்லூரியால் நடத்தப்பட்ட H.N.D.A பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். இவர் யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார். இவர் தற்போது வகிக்கும் பதவியில் மென்மேலும் உயர்ச்சி பெற வேண்டும் என மனமார வாழ்த்துகின்றோம்.

- அப்பா, அம்மா

(958)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.03.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.